விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 25 புதன்கிழமை (10.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 265

# ஐ.நாவில் உரை நிகழ்த்த மகிந்தவை அனுமதியாதீர்



## வைகோ தலைமையில் நேற்று போராட்டம்

(சென்னை)

ஈழத்தமிழர் நலன்கருதி தனி ஈழத்துக்கான பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும். ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்ற அனுமதிக்கக் கூடாது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ம.தி.மு.க தலைவர் வைகோ தலைமையில் இக் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயர்நிலைக்குழுக் கூட்டம் தலைமைக் கழகம் தாயகத்தில் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

இக் கூட்டத்தில், இலங்கை

19 ஆம் பக்கம் பார்க்க....

## சம்பந்தனின் நிபந்தனைகளுடன் இணங்க முடியாது-திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தனினால் விடுக்கப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்க முடியாது என சிரேஷ்ட அமைச்சரும், சர்வ கட்சி குழுவின் முன்னாள் தலைவருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எந்த மட்டத்திலும் கலந்துரையாடல்களை நடத்தினால், அது சிறந்ததாகும். இதனை முன்னோக்கி கொண்டு செல்லவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது. இதனை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்தின்

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நாவில் மகிந்த உரையாற்றுவார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 69 ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கூட்டத்தொடர் இம் மாதம் 16ஆம் திகதி முதல் அடுத்த மாதம் ஏழாம் திகதி வரையில் நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்.அகதிகள் உண்ணாவிரதப் போர்



(இராமேஸ்வரம்)

தனது குடும்பத்தினருடன் தாம் சேர்ந்து வாழ அனுமதிக்கப்பட வேண்டுமெனக் கோரி, குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு, திருவண்ணாமலையில், தனியான முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள், உண்ணாவிரத போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

தானும் தனது குடும்பத்தினரும், கட்டப்பட்டுக்கொண்டிருந்த தமது வீட்டையும் கைவிட்டு, சிறந்த எதிர காலம் மற்றும் நல்வாழ்வு கிடைக்குமென நம்பி, இந்தியாவிற்கு வந்ததாகவும் ஆனால் மூன்று மாதங்களுக்கு முன்னர், தாங்கள் இராமேஸ்வர கரைக்கு வந்து சேர்ந்த பின்னர், தமது எண்ணங்

19 ஆம் பக்கம் பார்க்க....

## விடுதலைப் புலிகளின் தடை உடைத்தெறிய வைகோ படை

11 ஆம் பக்கம் பார்க்க....

படுகொலை செய்யப்பட்டோரின் அஞ்சலிக்குத் தடை

## த.தே.கூட்டமைப்பு எம்.பிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதிகளில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொலிஸாருக்கும் இடையே நேற்று செவ்வாய்க்கிழமை மாலை முறுகல் நிலை ஏற்பட்டது.

சத்துருக்கொண்டான்படுகொலையின் நினைவாக அஞ்சலி செலுத்துவதற்காக மட்டக்களப்பு நாடாளு

19 ஆம் பக்கம் பார்க்க....

## 14 உணவகங்களுக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில், சுகாதாரமற்ற முறையில் இயங்கி வந்த 14 உணவகங்கள் மற்றும் 2 வெதுப்பகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் சுகாதார வைத்திய அதி

19 ஆம் பக்கம் பார்க்க....

## பெண்களின் அங்கங்களை படம்பிடித்தவர் கைது


(யாழ்ப்பாணம்)

பெண்களை அநாகரீகமான முறையில் தனது தொலைபேசியில் புகைப்படமெடுத்த குற்றச்சாட்டில் வாகனச் சாரதி ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் யாழ்.மத்திய பேரு

19 ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம்களுக்கு அநீதி ஏற்பட மகிந்த இடமளிக்கவில்லை



### கூறுகிறார் ஹக்கீம்

(கொழும்பு)

முஸ்லிம் மக்களுக்கு எந்த வொரு அநீதியும் ஏற்பட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இடமளிக்கவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் ஒரு சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிறுபான்மை சமூகத்திற்கு எதிராக செயற்படுகின்றனர்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேசம் எம்மை திரும்பி பார்க்க அடித்தளமிட்டது புலிகளின் போராட்டமே


### போராடாமல் எதுவுமில்லை என மனோ உரை

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டமே சர்வதேச சமூகமும், ஐ.நா சபையும் இன்று எம்மை திரும்பிப் பார்ப்பதற்கு அடித்தளமிட்டது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் 15-வது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் மனோ கணேசன் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும்



19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாணிக்கவாசகர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

கலாபூஷணம் செ.மாணிக்கவாசகர் நேற்று கொழும்பில் காலமானார். அவருக்கு வயது 76.

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாபூஷணம் மாணிக்கவாசகர் கவிதையிலும் எழுத்துத்துறையிலும் தனித்துவமான இடத்தைக் கொண்டிருந்தவர்.

அவரின் ஆக்கங்கள் வலம்புரி பத்திரிகையில் வெளிவந்திருந்தன.

இவர் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி கணேசராஜாவின் தந்தையார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரின் இறுதிக்கிரியைகள் இல.40, 1/4B, பாம் றோட், மட்டக்குளி- கொழும்பு முகவரியிலுள்ள இல்லத்தில் நாளை மாலை 4 மணிக்கு நடைபெறும். (ந)

# கசிப்பு உற்பத்தி; மூவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதவாளசிங்கன்குளம் பிரதேச காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தியை மேற்கொண்ட சந்தேகநபர்கள் மூவரை கைது செய்துள்ள பொலிஸார், விசாரணைகளின் பின்னர் அவர்களை பிணையில் விடுவித்துள்ளனர்.

தமக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றினை அடிப்படையில் குறித்த பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இரவு சுற்றிவளைப்பொன்றினை மேற்கொண்ட போது, குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கசிப்பு உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலிருந்து மூன்று பரல் கசிப்பையும் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரும் ஞாயிற்றுக்கிழமை பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர் (செ-4)

# சிங்கப்பூரிலிருந்து தங்கம்; சென்னையில் 10 பேர் கைது

## 45 இலட்சம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

தங்கம் மறைத்து வைத்திருந்ததாக கூறி சென்னை வந்த சிங்கப்பூர் பயணிகள் 10 பேருக்கு ரூபாய் 45 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை பன்னாட்டு விமான நிலையத்திற்கு சிங்கப்பூரில இருந்து நேற்று முன்தினம் இரவு 3 தனியார் விமானங்கள் வந்தன.

இந்த விமானங்களில் பெருமளவில் தங்கம் கடத்தி வரப்படுவதாக, மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து விமான நிலையத்திற்கு வந்த அதிகாரிகள், சிங்கப்பூரில் இருந்து 3 விமானங்களில் வந்த 27 பயணிகளிடம் தீவிரசோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையில் 10 பயணிகள் 100 கிராம் முதல் 150 கிராம் வரை தங்கம் மறைத்து வைத் திருந்தது தெரியவந்தது. இதையடுத்து தங்கம் வைத்திருந்த 10 பயணிகளுக்கு 45 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்பட்டது. (இ)





| | | |
|---|---|---|
| கொழும்பு – டுபாய் | –20000 | O/W |
| கொழும்பு – சென்னை | –22000 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22400 | RTN |
| கொழும்பு – டோகா | –26000 | O/W |
| கொழும்பு – மலேசியா | –32000 | RTN |
| கொழும்பு – பெங்களூர் | –32200 | RTN |
| கொழும்பு – சிங்கபூர் | –30800 | RTN |
| கொழும்பு – சிட்னி | –61000 | O/W |
| கொழும்பு – மாலைத்தீவு | –32000 | RTN |
| கொழும்பு – மிலான் | –57800 | O/W |
| கொழும்பு – சுவிஸ் | –83500 | RTN |
| கொழும்பு – லண்டன் | –45400 | O/W |
| கொழும்பு – பிரான்ஸ் | –45500 | O/W |
| கொழும்பு – ஜேர்மன் | –71500 | RTN |
| கொழும்பு – நியூசிலாந் | –88700 | O/W |
| கொழும்பு – கனடா | –105700 | O/W |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்

#128, Brown Road, Jaffna

128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்

(சி-8466)



## தவறிவிட்டது

08.09.2014 (சந்நிதி கோவில் தேர்த் திருவிழா) அன்று சந்நிதி கோவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் அச்சுவேலி பஸ்ஸில் சிங்கப்பூர் பத்துப் பவுண் தங்கச் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(C-8465) தொடர்பு

077 3210061

## வீடு விற்பனைக்கு

K.K.S றோட்டில் தாவடிச் சந்திக்கும் உடுப்பிட்டிச்சந்திக்கும் இடையில் உள்ள 4 அறை, குசினி, குளியல்அறை, 3 கோல், சுற்றுமதில், கிணறு உடைய வீடு வளவும் அருகில் 1 3/4 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

0771932430


# மகிந்த போட்டியிட்டால் வழக்குத் தொடுப்பேன் –சரத் என்.சில்வா

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக தேர்தலில் போட்டியிடுவதை தடுப்பதற்காக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பேன் என தெரிவித்துள்ள முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா இது குறித்த வழக்கில் தானே ஆஜராவேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது ஆட்சிக்காலத்தை செய்த பின்னர் மூன்றாவது தடவை தேர்தலில் போட்டியிட முடியாது.

ஜனாதிபதி ஒருவர் மூன்று தடவைகள் போட்டியிடலாம் என தெரிவித்த அரசமைப்பின் 18-வது திருத்தம் நல்லெண்ண அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை. அரசமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்ட போதிலும் அது உரிய முறையில் இடம் பெறவில்லை.

இதன் காரணமாகவும், இது பொது நல வழக்கு இல்லை என்பதாலும் ஜனாதிபதி தற்போதைய உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையை கோரமுடியாது என அவர் தெரிவித்துள்ளார். (செ-11)


## UK செல்ல விரும்பும் மாணவர்களுக்கான கருத்தரங்கு

BY: BRITISH COUNCIL

UK Student Visa வில் சென்று படிக்க விரும்பும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு ஒன்று எமது நிறுவனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனுமதி முற்றிலும் இலவசம்

கல்விச் சான்றிதழ்களுடன் வருவதன் மூலம் தமக்கான பாடநெறிகளைத் தெரிவு செய்ய முடிவதுடன் மேலதிக விளங்கங்களையும் பெறமுடியும்

12.09.2014 காலை 10.30 - 11.00 வரை

(சி-8463)

E-CITY COLLEGE OF ENGLISH

இல.372, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ். 0773400418/0212217106

அநேகரின் வேண்டுகோளிற்கு இணங்க இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட பரத நாட்டியம் பயிலும் மாணவிகளிற்கான அக்கடமி Cotton சாறிகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (7442)

சிவகணேசன் ரெக்ஸ் ரையில்ஸ் 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.


## பாரதி விழா - 2014

யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றத்தினரால் வருடந்தோறும் நடாத்தப்படும் பாரதி விழா எதிர்வரும் 11.09.2014 (வியாழக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு கல்லூரி ஒட்லி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினர்: திரு.மார்க்கண்டன் றூபவதனன் சிரேஷ்ட விரிவுரையாளர், ஊவாவெலிஸ்ச பல்கலைக்கழகம்.

சிறப்புரை, பாரதி பாடல்கள், நடனம், நாடகம், பட்டிமன்றம் போன்ற பல கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- அதிபர் | தமிழ் மன்றத்தினர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

(சி-8460)


## A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

- Diploma in Information Technology — DiTec
- Diploma in Office Automation — DOA
- Diploma in Pc Applications — DPCA
- Adv. Dip. in Hardware & Networking — ADHN
- Dip. in Video Production & Multimedia — DVPM
- Dip.in Web Designing & Development — DWD
- Dip. in Computerized Accounting — DCA

Tally, JAVA, AutoCAD

75% OFF



DMI COMPUTER EDUCATION

(C-8464)

யாழில் முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் இருந்து

Spoken English

முழுமையானதும் தரமானதுமான கணினிக் கல்விக்கு

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

பிரிவு ii - 10/09/2014 9.30 am

பிரிவு iv - 15/09/2014 9.30 am


☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.

☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்

☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

# DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, Tel.: 021-226 2470 | No.174, கண்டி வீதி, (HNB வங்கி அருகில்) Tel.: 021-227 0775 | No.130, K.K.S.வீதி, (NSB வங்கி அருகில்) Tel.: 021-224 1970 |

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் க.பொ.த உயர்தரத்திற்கு கற்பிக்கும் ஆசிரியரும், பகுதித் தலைவருமாகிய திருமதி பற்றீசியா தேவா அவர்களின் அன்புத் தந்தை

## சூசைப்பிள்ளை யோசேப் இரத்தினம்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(7736)

யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள்.

# மரண அறிவித்தல்



பிறப்பு 30.05.1930 இறப்பு 09.09.2014

## சின்னத்தம்பி சிதம்பரம் (சின்னக்கிளி)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், புத்துவெட்டுவானை வசிப்பிடமாகவும், இல. 88, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிதம்பரம் நேற்று (09.09.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2014) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இல.88, உதயநகர் கிளிநொச்சியில் இடம் பெற்று, பூதவுடல் புத்துவெட்டுவான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

இல.88, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி. (சி-8467)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் சுகாதார அமைச்சர். ப.சத்தியலிங்கம் ஆகியோருக்குரிய உத்தியோகபூர்வ வாகனங்கள் நேற்றுக்காலை வடக்குமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியால் முதலமைச்சரின செயலாளர் திருவாகரன், சுகாதார அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது. (படம்: என்.குமார்)

## மண்வெட்டியால் தாக்கியவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது

மண்வெட்டியால் தாக்கி ஒருவரை கொலை செய்த சம்பவத்தில் குற்றவாளி என அடையாளம் காணப்பட்ட நபருக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 4ஆம் திகதி மண்வெட்டியால் தாக்கி குறித்த கொலை புரியப்பட்டுள்ளது.

கொலை வழக்கு கடந்த 10 வருடங்களாக விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில் சந்தேகநபர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதால் அனுராதபுரம் மேல்நீதிமன்ற நீதிபதி தம்மிக கனேகொட குற்றவாளிக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

எப்பாவெல-கட்டியாவ யாய பகுதியைச் சேர்ந்த நபருக்கே மரணதண்டனைவிதிக்கப்பட்டுள்ளது. (இ)


CIMA
Chartered Institute of Management Accountants
@
Wisdom
021 2220727 | 021 7200777

### தேவை

புடைவை விற்பனையில் அனுபவமுள்ள மற்றும் பழகவிரும்புகின்ற பெண் ஊழியர்கள் தேவை. நேரில் வந்து சந்திக்கவும்.

தொடர்புகளுக்கு :-
**லைடன் புடவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
T.P : 021 222 2381
(8452)

**யாழ்ப்பாணத்தில் 22-11-2014 நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்**

"IELTS Registration Centre for British Council"

IELTS
The world speaks IELTS

* Strategies and techniques are taught to gain a higher score
* All 4 skills are paid equal attention
* Special attention to weak students
* 60 hours of learning in 8 weeks
* Affordable charges

கடந்த 28 மே 2014ல் Colombo Cinnamon Lakeside Hotel ல் நடைபெற்ற சிறந்த IELTS நிலையங்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் நாட்டின் சிறந்த நிலையம் என எமது கல்லூரி தெரிவு செய்யப்பட்டு எமக்கு விருதினையும் வழங்கிக் கௌரவப்படுத்தியுள்ளனர்.



★ கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
★ இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.

**Courses Conducted by University Lecturers**

**வகுப்புக்கள் 15-09-2014 இல் ஆரம்பமாகும்**

Course Schedule

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.00 -11.00 | 7.30-10.00, 5.00 - 7.00 |

கடந்த 10 வருடங்களாக No.143-Adiyapatham Road Thirunrlveli. யில் பணியாற்றி இப்போது No.#192 Navalar road இல் பணியாற்றுகின்றோம்.

**BRITISH COLLEGE OF ENGLISH**
No. 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887


## நடைபாதை வியாபாரிகளை உடன் அப்புறப்படுத்துங்கள்

### வலி.தெற்கு வர்த்தக சங்கத் தலைவர்

வலி.தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்து வியாபாரத்தை மேற்கொள்ளும் நடைபாதை வியாபாரிகளை உடன் அப்புறப்படுத்த வேண்டும். இவர்களால் எமது வர்த்தகப் பெருமக்கள் பெரும் இடர்களையும் அசௌகரியங்களையும் எதிர்கொள்கின்றனர் என வலி.தெற்கு வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் தெரிவித்தார்.

வலி.தெற்கு பிரதேச வர்த்தகர்கள் சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் பிரதேசசபை மண்டபத்தில் பிரதேசசபையின் தவிசாளர் தி.பிரகாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தலைமை உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது பிரதேசத்தின் வர்த்தகர்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளார்கள். தென்பகுதிகளில் இருந்து இங்கு வந்து வியாபாரம் செய்யும் நடைபாதை வியாபாரிகளால் எமது வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். இலட்சக் கணக்கில் முதலிட்டு, பிரதேச சபைக்கு வருடாவருடம் முறையாக வியாபார அனுமதி பெற்று உரிய முறையில் இவர்கள் வியாபாரத்தை நடத்துகின்றார்கள். ஆனால், தென்னிலங்கையில் இருந்து வருகைதரும் வியாபாரிகள் பிரதேச சபையிடம் வியாபார அனுமதி பெறாது, பொது மக்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலை ஏற்படுத்தும் வகையில் உடு புடைவைகளையும், எலக்றோனிக் பொருட்களையும், பான்ஸி பொருட்களையும் மிகவும் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றார்கள். இதனால், பெரும் முதலீடு செய்த எமது வியாபாரிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

வர்த்தகர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் குரல் கொடுப்பதற்கு பிரதேசத்தில் வர்த்தகர் சங்கம் இல்லாதமை பெரும் குறையாகக் காணப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் வியாபார நிலையங்கள் பலவற்றில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால், இவை தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.வர்த்தகர் சங்கத்தின் ஒருங்கமைந்த செயற்பாட்டினூடாக வர்த்தகர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும். இவ்வாறான ஒரு ஒருங்கமைப்பை ஏற்படுத்தித் தந்த வலி.தெற்கு பிரதேச சபையினருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## இராசி பலன்

**10.09.2014**
**ஆவணி 25, புதன்கிழமை**
**சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு**
**பிரதமை காலை 6.06 மணிவரை**
**துதியை பின்னிரவு 4.05 மணிவரை**
**உத்தரட்டாதி பின்னிரவு 2.28 மணிவரை**
**இராகுகாலம் 12.03-1.33 மணிவரை**
**சுபநேரம் 4.33-6.03 மணிவரை**

வளவன்

**மேடம்** தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயர வழிவகுக்கும், பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**மிதுனம்** தொட்ட காரியங்களில் வெற்றி பெறும் நாள், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், உடல் நலனில் உற்சாகம் பெருகும், போசன நன்மையுண்டு.

**கடகம்** மங்கையரால் ஏற்பட்ட மனக் கலக்கம் மாறும், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், புதிய முயற்சிகள் முன்னேற்றம் தரும், புகழ் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**சிம்மம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபடவேண்டிய நாள், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்ச்சி அவசியம்.

**கன்னி** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், பயணத்தால் பலன் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், பழைய பாக்கிகளை நாசூக்காக பேசி வசூலிப்பீர்கள்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, விருந்து விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சி களில் [illegible] [illegible]

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருந்தவர்கள் விலகுவர், திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள், வாகன சுகமுண்டு.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள்.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப் படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறலாம், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய எல்லைக் கிராமங்கள் நிலச்சரிவினால் நீரில் மூழ்கும்!



(காத்மண்டு)

நேபாளத்தின் சன்கோசி நதிக் கரையில் நிலச்சரிவு ஏற்பட்டு அங்குள்ள அணை உடைந்ததால், அந்நாட்டு எல்லையை ஒட்டியுள்ள இந்திய கிராமங்கள் பல மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை காத்மண்டுவை சீனாவுடன் இணைக்கும் நெடுஞ்சாலை அடித்து செல்லப்பட்டது.

நேபாளத்தில் கடந்த மாதம் ஏற்பட்ட மழை வெள்ளம், திடீர் நிலச்சரிவு மற்றும் நிலநடுக்கத்தால் சுமார் 200 பேர் பலியாகினர்.

இயற்கை பேரழிவுகளால் சுமார் 22 ஆயிரம் மக்கள் பல்வேறு இடங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் திபெத்திலிருந்து பாயும் சன்கோசி நதி, நேபாளம் வழியாக பிஹாரில் வந்து கங்கையில் இணைகிறது. இந்த நிலையில் நேபாளத்தில் கடந்த மாதம் ஏற்பட்ட நிலச்சரிவில் சிந்து பல்சோக் என்ற பகுதியில் இயற்கையான அணைக் கட்டு ஒன்று உருவானது.

இந்த அணை உடைந்து ஏற்படும் அபாயத்தை தடுப்பதற்காக, நேபாள இராணுவத்தினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், திடீரென உருவான ஆறுகளை வழி மாற்றும் பணிகளிலும் ஈடுபட்டனர்.

குண்டுகளை வைத்து அணையை தகர்க்க திட்டமிடப்பட்டிருந்த நிலையில், இயற்கையாக உருவான அணை திடீரென உடைந்தது.

இதனால், அந்த பகுதியில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இதில் மீட்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ராட்சத கிரேண்கள் அடித்து செல்லப்பட்டன.

இந்த வெள்ளப்பெருக்கால் சிந்து பல்சோக் பகுதியில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்த அணை உடைப்பால், வெள்ளம் பெருக் கெடுத்தால் நேபாள எல்லையை ஒட்டிய இந்திய கிராமங்கள் பல மூழ்கும் அபாயம் உள்ளதாக நேபாள அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். (இ)


## வீடு வாடகைக்கு

சகல தளபாட வசதிகளுடன் கூடிய புதிய வீடு கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு. K.K.S வீதி பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் முன் ஒழுங்கையில்.

0777035457

(774)


## நடந்து சென்றவரை மோதியது பேருந்து

செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு சென்று கொண்டிருந்த நபர் மீது தனியார் பேருந்து மோதி விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று நேற்று பிறாப்பட்டி ஆலடி சந்தியில் இடம் பெற்றுள்ளது.

செவ்வச்சந்நிதி ஆலயத்தின் தீர்த்த உற்சவமான நேற்று காலை 10.30 மணியளவில் காவடிகளுடன் நடந்து சென்று கொண்டிருந்த ராஜகிராமம் கரவெட்டி மேற்கை சேர்ந்த தேவன் ரவீந்திரன் (வயது 26) மீது ஆலயத்தில் இருந்து வந்து கொண்டிருந்த தனியார் பேரூந்து மோதியதில் மேற்படி நபர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக சாரதியை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (செ)

# விநாயகர் சிலை கரைப்பு; நால்வர் மூழ்கிப் பலி

நாடு முழுவதும் விநாயகர சதுர்த்தியின் போது ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் கடந்த நான்கு நாட்களாக நீர்நிலைகளில் கரைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வகையில், ராஜஸ்தான் மாநிலத்தின் ஜோத்பூர் மாவட்டத்தில் உள்ள பொருண்டா நகரில் பூஜைக்காக வைக்கப்பட்டிருந்த விநாயகர சிலைகள் அப்பகுதியில் உள்ள குட்டையில் நேற்று கரைக்கப்பட்டன.

சிலைகளுடன் குட்டைக்குள இறங்கிய சில இளைஞர்கள் உற்சாக மிகுதியில் நீரின் ஆழமான பகுதிக்கு சென்று நீந்திக் கொண்டிருந்தனர். அப்போது, புதைச்சேற்றில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த துர்கா சிங (25), பிரதீப் சிங்(19), அபிஷேக் சிங்(18) மற்றும்ஹேப்பி சிங்(17) ஆகியோர் பரிதாபமாக பலியாகினர். (இ)



யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவபீட மூன்றாம் வருட மாணவர்கள் ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கத்தில் தங்கி யுள்ளோரை அண்மையில் சந்தித்து அவர்களுடன் உரையாடி மதியபோசன உணவினை வழங்கியிருந்த போது...


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## 30-வது பொதுப் பட்டமளிப்பு விழா 06.10.2014

**அறிவித்தல்**

06.09.2014 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட மேற்படி விளம்பரம் தொடர்பாக வைத்தியமாணி சத்திரசிகிச்சை மாணி பட்டங்கள் பெறத் தகுதியுடையவர்கள் 2013 கார்த்திகை மாதமும் அதற்கு பின்னர் நடாத்தப்பட்ட தேர்வுகளிலும் சித்தியடைந்தவர்கள் தமது வேண்டுகோள் விண்ணப்பத்தினை 23.09.2014 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்குமாறு அறியத் தருகிறேன்.

பதிவாளர்

(சி-8461) 09.09.2014

## கைத்தொழில் அபிவிருத்திச் சபை

### பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

**யாழ்ப்பாணம், அச்சுவேலியில் அமைந்துள்ள அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள்**

யாழ்ப்பாணம், அச்சுவேலியில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டை புனரமைக்கப்பட்டு 2014 ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டதுடன், 24 மணிநேர நீர்வழங்கல், 3 இணைப்பு மின்சாரம், வடிகாலமைப்பு மற்றும் கழிவுநீர் அகற்றல் வசதிகள், தீ பாதுகாப்பு, பாதுகாப்பு சேவைகள், கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் மற்றும் ஒவ்வொரு காணித் துண்டத்திற்குமான பாதைகள் உள்ளடங்கலாக அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட கைத தொழில்களுக்கான காணித் துண்டங்களினை வழங்குகின்றது.

வட மாகாணத்திலுள்ள இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்பினை உருவாக்குதல் மற்றும் புதிய உற்பத்தி தொழில்நுட்பங்களுடன் கூடிய நவீன கைத்தொழில் அலகுகளை தாபிப்பதற்கு விரும்பும் கைத்தொழிலாளர்களுக்கு 40, 80 மற்றும் 160 பேர்ச்களைக் கொண்ட சில காணித் துண்டங்கள் உள்ளன. காணித் துண்டங்களை நீண்ட கால குத்தகைக்கு பெற்றுக் கொள்வதற்கு ஆர்வமுடைய கைத்தொழிலாளர்களிடமிருந்து, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் www.idb.gov.lk இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியுமான அல்லது யாழ்ப்பாணம், கொழும்பு வீதியில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலுள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபை யாழ் மாவட்ட அலுவலகத்திலிருந்து பெற முடியுமான குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் அவர்களது கருத்திட்ட பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் முதலீடு செய்வது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறுவதில் ஆர்வமுள்ளவர்கள், 2014 செப்டம்பர் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு அச்சுவேலி கைததொழில்பேட்டையில் இடம்பெறவுள்ள முதலீட்டாளர் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்படுகின்றனர். இக்கலந்துரையாடலில் கலந்து கொள்பவர்கள் யாழப்பாண கைத்தொழில் அபிவிருத்திச் சபை பிரதிப் பணிப்பாளர் திரு.எஸ். சிவகங்காதரன் அவர்களை தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற முடியும். தொலைபேசி இலக்கங்கள்: 021 222 2421, 0779497924 (கையடக்க தொலைபேசி), 021 222 2421 (தொலைநகல்)

வே.சிவஞானசோதி
செயலாளர்

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
011-2669280

(சி-8462)


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# தென்னிந்திய திருத்தல யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு ஊடான திருத்தல யாத்திரை ஆரம்பம் 20.10.2014. நாட்கள் 16, யாத்திரிகர்கள் 10. நிறைவு 07.11.2014. இந்த யாத்திரையின் சிறப்பு சூரசங்காரம் செய்யமுன் பார்வதிதேவியாரிடம் முருகப்பெருமான் வேல் வாங்கும் போது முகத்தில் (முருகன் முகத்தில்) வியர்வைத் துளிகள் வரும் (வியர்வை சிந்தும்) முருகப் பெருமானை தரிசிப்பதுடன் திருச்செந்தூரில் சூரசங்காரத்தையும் காணலாம்.முனபதிவு செய்யவும். தரிசிக்கும் ஆலயங்கள்: மலைக்கோட்டை விநாயகர், பிள்ளையார்பட்டி, பஞ்சபூதத்தலங்கள், ஆறுபடைவீடுகள், இராமேஸ் வரம், திருப்பதி, 9 நவக்கிரக ஆலயங்கள், மேல்மருவத்தூர், பிரம்மாகோவில், சீர்காழி தோணியப்பர், அழகர்கோவில் நாகாத்தம்மன், பொற்கோவில், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், நவபாஷாணம், ஸ்ரீரெங்கம், தஞ்சைப்பெருங்கோவில், சமயபுரம், குருவாயூர், சோட்டாணிக்கரை, கொடுங்களூர், சுசீந்திரம், கன்னியாகுமாரி, பகவதி அம்மன் உட்பட (அனைத்து இடங்களும்) மைசூர் சாமுண்டீஸ்வரி, நந்திக்கோவில், அலமேலுங்கா, மாங்காடு, வேற்காடு, வெங்காளி அம்மன், தன்வந்திரிவிஸ்ணு, 108 லிங்கங்கள், இரத்தின கிரி,திருக்கடையூர், பட்டீஸ்வரம் துர்கா, மருதமலை முருகன், பிரித்தி விலிங்காதேவி, சீரடிபாபா, உப்பிலிஅம்மன், வலஞ்சுழிவிநாயகர், ஸ்ரீரெங்கர் பட்டினம், 150 ஆண்டுகள் பழைமையான ஆலயம், திருவேணி சங்கமம், பிருந்தாவனம் காடின், அரண்மனை பாலஸ், வடபழனி, அஷ்டலட்சுமி, திருவாரூர், பெங்களூர்சிவன், சக்கரபாணி, சாரங்கபாணி, கபாலீஸ்வரர், கூடலழகா மதனசேனபால சுவாமி, பார்த்தசாரதி, ஆறுபடை முருகன், மருந்தீஸ்வரா, அனந்த மங்கலம், ஆஞ்சநேயர், கறுப்பு சுவாமி, காஞ்சி காமாட்சி, வரதராயர் பெருமாள், சரஸ்வதி ஆலயங்களை தரிசிப்பதுடன், ரமணமஹரிஷி ஆச்சிரமம், கிரிவலம் (வண்டியில் வலம் வருதல்) பாண்டிச்சேரி, பீச், மரீனாபீச், ஊட்டியும் காணலாம்.

**பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை**

இரு வழி விமான ரிக்கெட், 3 வேளை உயர்தர சைவ உணவு 4 மணி காப்பி,ரீ, நாளொன்றுக்கு 2லீற்றர் மினரல் வோட்டர், 2பேருக்கு கட்டில், மெத்தை, குளியலறையுடன் கூடிய றூம்கள்,யாத்திரை முடியும் வரை AC வாகனவசதி, கொழும்பிலிருந்து எயாபோட்போக வாகனவசதி.

இவை அனைத்தும் அடங்கும். மேலும் எமது சொந்த சேவையாக யாழ். பஸ் நிலையத்தில் இருந்து கொழும்பு வரவும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லவும் வாகன வசதி செய்து தரப்படும்.அத்துடன் ஆலயங்களில் எடுக்கும் புகைப் படங்கள், 50 படங்களும் தரப்படும். விருப்பமுடையவர்கள் கடவுச்சீட்டு போட்டோக் கொப்பி ஒன்றும் கலர்புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும். யாத்திரை தொடங்கியதில் இருந்து முடியும் வரையும் நாமே உங்களுடன் உடன் பயணிப்போம்.

மேலதிக விபரங்கட்கு:
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு-11
T.PNo.-0777680102, 011 3030806
web:www.sridevipilgrims.com

யாழ்ப்பாணம் தொடர்புகளுக்கு:
M.K.வாசகர்
0772487939, 0755142362

(சி-8459)

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா: 13 செவ். 4 இல்
தகைமை/தொழில்: O/L ஆட்டோ உரிமையாளர்
தொ.இ: B/3551

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 39.25, செவ்.2 இல்.
தொ.இ: B/3555

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 33.5
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L/ பொலிஸ்
தொ.இ: B/3556

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 62 செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L, Civil, Draftsman. சேவையர்
தொ.இ: B/3557

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 30.25 செவ். 7 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: B.Sc. B.Ed ஆசிரியர்
தொ.இ: G/3599

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
செவ். 8 இல்.
தகைமை/தொழில்: பட்டதாரி
தொ.இ: G/2716

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 30 செவ். 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில் B.Sc/ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/2718

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 77 செவ் 3 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BIT
தொ.இ: G/2721

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# சூரசங்காரத்தின் முதல் நாள் கந்த சஷ்டி விரதத்தின் முருகப்பெருமானின் முகத்தில் வியர்வை மணித்துளிகள் வருவதை கண்ணாரக் கண்டேன்

எதிர்பாராத விதமாக தென்னிந்திய யாத்திரை செல்ல வேண்டும் என என்னுள் ஓர் உணர்வு ஏற்பட்டது. தனியாக சென்றுவர முடியாது என சிந்தித்தபொழுது ஓர் நண்பர் மூலம் திரு. ஸ்ரீரெங்கநாதன் ஐயா அவர்களின் 0777680102 என்னும் தொலைபேசி இலக்கத்தை தந்து தொடர்பு கொள்ளுமாறு சொன்னார். அவருடன் தொடர்புகொண்டு சகல பயண ஒழுங்குகளை மேற்கொண்டு என்னையும் மற்றும் 10 பேரையும் அழைத்துக் கொண்டு இந்தியா சென்றார். எனது குறிக்கோள் உண்மையாக சூரசங்காரம் நடைபெற்ற இடமான திருச்செந்தூரில் சூரசங்காரம் காண வேண்டும் என்பதை முகவாகிய திரு. ஸ்ரீரெங்கநாதன் ஐயா அவர்களிடம் முன்பே சொல்லி இருந்தேன். அதற்கேற்ப விதமாகவே நிகழ்ச்சிஒழுங்கு செய்யப்பட்டுயாத்திரைசிறப்பாகநடந்துவரும்போதுஒருநாள்வண்டி(வாகனம்)பழுதடைந்துநின்றுவிட்டது மறுநாள்திருச் செந்தூரில் சூரன்போர் பார்க்க முடியாமல் போய்விடுமோ என கவலைப்பட்ட போது இதை அவ தானித்த எமது முகவர் அவர்கள் கவலைப்படாதீர்கள். வாகனம் பழுதுபார்க்கும் வரை உங்களுக்கு ஓர் அரிய காட்சியை காண்பிக்கின்றேன். அதை நீங்கள் எல்லோரும் பார்க்க வேண்டும் என்ற முருகனின் அழைப்பு போல் உள்ளது. வாருங்கள் என்று எங்களை அதாவது 11 பேரையும் ஓர் முருகன் ஆலயம் அழைத்துச் சென்றார். அங்கு கோவிலில் சரியான கூட்டம் இருந்தது. கந்தஷஷ்டி 5 ஆம் நாள், நானும் கந்தஷஷ்டி விரதம் அனுஷ்டித்திருந்தேன். உடனே எம்மை எல்லோரையும் ஓர் இடத்தில் நிற்கச் செய்துவிட்டு ஆலய நிர்வாகிகளிடம் பேசி எம்மை ஒருவழியாக முருகனின் மூலஸ்தானத்திற்கு அழைத்துச் சென்றார்.

அங்கே கண்ட காட்சி என் உடம்மை மெய்சிலிர்க்க வைத்து விட்டது. முருகப் பெருமானுக்கு பார்வதி தாயாரிடமிருந்து வேல் எடுத்து குருக்கள் முருகப் பெருமானிடம் சாத்தும் பொழுது முருகப்பெருமானின் முகத்தில் வியர்வை துளிகள் வருவதை கண்டு மெய் சிலிர்த்து விட்டேன். இதை குருக்கள் வெள்ளைத் துணியில் ஒற்றி ஒற்றி எல்லோருக்கும் காண்பித்தார். எல்லோரும் இந்தக் காட்சியை கண்டு முருகப் பெருமானை வணங்கி வெளியே வரும் போது இரவு 10.30 மணி ஆகிவிட்டது. இந்த இடைவேளைக்குள் முகவராகிய திரு. ஸ்ரீரெங்கநாதன் அவர்கள் கந்தஷஷ்டி விரதம் பிடிப்பவர்களுக்கு தனியாக பசுப்பாலும் பழவகைகளும் விரதம் இல்லாதவர்களுக்கு பலகாரம் காப்பியும் எங்கோ ஆட்டோவில் சென்று வாங்கி வைத்திருந்தார்.

வெளியே வந்து அவரைச் சந்தித்து இந்த அரிய காட்சியை எம்மை காணவும் தரிசிக்கவும் காண வைத்ததற்கு எல்லோரும் முதலில் நன்றி தெரிவித்தோம். அதற்கு அவர் கூறிய வார்த்தை இன்னும் நெஞ்சைவிட்டு அகலவில்லை. இந்த நிகழ்ச்சியை நீங்கள் காண வேண்டும் என்பதற்காகவேதான் வாகனம் பழுதடைந்தது போல் இருந்தது. முருகப்பெருமானின் அழைப்பு உங்கள் அனைவருக்கும் இருக்கின்றது என்றார். அதுவும் உண்மைபோல் தான் எல் லோருக்கும் தோன்றியது. வாகனம் புதியது பழுது படவேண்டிய அவசியம் இல்லை என்றார் சாரதி. பின்பு எல்லோரும் சாப்பிட்டு திருச்செந்தூர் சென்று தங்கி மறுநாள் முருகனை தரிசித்து மாலை நினைத்ததுபோல் சூரசங்காரம் உண்மையாக நடந்த இடத்தில் சூரசங்காரம் கண்டு மறுநாள் காலை பாறணை உணவிற்கும் பிராமண ஹோட்டலில் ஏற்பாடாகியிருந்தது. பாறணை முடித்து எமது யாத்திரையை தொடர்ந்தோம் .அப்போது முகவர் ஸ்ரீ ரெங்கநாதன் ஐயா விடம் ஓர் வேண்டுகோள் வைத்தோம். ஒவ்வொரு கந்தஷஷ்டி விரதத்தின் போதும் இந்த நிகழ்ச்சியை எமது மக்களுக்கு அழைத்து வந்து காண்பிக்குமாறு கேட்டோம். அவர் சொன்னார் பத்திரி கையில் விளம்பரம் கொடுப்பேன். விருப்பப்பட்டு 10 பேர் வந்தால் அழைத்து வந்த காண்பிக்கலாம். எமது மக்களுக்கும் ஆன்மீகத்தில் நம்பிக்கை வர வேண்டும். ஈடுபாடு இருக்க வேண்டும் என்றார். எமது கருத்து குறைந்த கட்டணம் நிறைவான சேவை 12 நாட்கள் சென்றதே தெரியவில்லை. முக்கிய ஆறு படை வீடுகள், திருப்பதி, நவக்கிரக கோவில்கள், பஞ்ச பூதத்தலங்கள் மேல் மருவத்தூர் உட்பட 50 இற்கும் மேற்பட்ட ஆலயங் களை தரிசிக்க அழைத்து சென்ற திரு. ஸ்ரீரெங்கநாதன் ஐயா அவர்கள் இன்றும் பலகாலம் இந்த சேவையை தொடர்ந்து செய்ய எல்லாம் வல்ல முருகப் பெருமான் நீண்ட ஆயுளையும், தெம்பையும் அருள்புரிய வேண்டும் என எங்களின் 11 பேரின் சார்பாகவும் எம்பெருமானை பிரார்த்திக்கின்றோம். அத்துடன் இதை வாசிப்பவர்களும் வரும் கந்தஷஷ்டி தினத்தில் அவருடன் சென்று எம்பெருமானின் அரிய காட்சியை கண்ணாரக் கண்டு நலமுடன் வாழ்வீர்களாக.

**அவரின் தொடர்புக்கு T.ஸ்ரீரெங்கநாதன்- தொலைபேசி இல. 0777 680102**


**சக்திவடிவேல், பலுகாடு, காரைநகர், யாழ்ப்பாணம்.**

(சி-8459)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது அரசியல் நிர்ணயங்களை தமிழரே நிர்ணயிக்க வேண்டும்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு



ஒவ்வொரு சமூகத்தினதும் அபிவிருத்திகளும் வரலாற்றுப் பதிவுகளும் அந்தப் பகுதிகளின் அரசியல் பிரதிநிதித்துவத்தை தெரிவுசெய்யும் தேர்தல் காலங்களில்தான் நிர்ணயிக்கப்படுகின்றது.

இந்தக் காலத்தில் மக்கள் செய்யும் தவறுகளால்தான் தமிழ் மக்கள் தடுமாற்றங்களுக்கு உள்ளாகின்றனர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி. குகேந்திரன் தெரிவித்தார்.

மிருசுவில், கரம்பகம் பகுதி மக்களது அடிப்படைத் தேவைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அப்பகுதி மக்களால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த மக்களுடனான கலந்துரையாடல் சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களிடையே ஒற்றுமை ஏற்படுமானால் [illegible]த்து வளங்களையும் அதிகாரத்துடன் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய அதிகாரிகள் ஒரு சிலரது பாராமுகமும் அசமந்தத்தனமும் ஏனைய உத்தியோகத்தர்களையும் பாதிக்க வைக்கிறது. அரச அதிகாரிகளும் பேதங்களை மறந்து மக்களது தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பவர்களாக மாற்றம் கண்டால்தான் ஒவ்வொரு சமூகத்தையும் திறம்பட உருவாக்க முடியும். இத்தகைய செயற்பாடுகளுக்கு நிச்சயமாக அரசியல் பின்னணி தேவைப்படுகிறது.

மக்களது பொருளாதார செயற்பாடுகளும் அபிவிருத்தி செயற்பாடுகளும் யதார்த்தமானதாக அமையவேண்டுமானால் ஒருமித்த கருத்தை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனைத்தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணக்க அரசியல் என்னும் நீரோட்டம் மூலம் சிறப்பானதாக செய்துவருகின்றார். மக்களது தேவைகளை கூடுமான அளவில் பூர்த்தி செய்ய வேண்டுமானால் அரசியல் ரீதியில் அமைச்சர் பலமான நிலையை அடைய வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுயநல அரசியலால் புலிகளை அரசியல் ரீதியான ஒரு இணக்கப்பாட்டிற்கு கொண்டுவரத் தவறியதால்தான் தமிழர்களது ஆயுதப் போராட்டம் முடிவுக்குவரவேண்டி வந்தது.

கடுமையான சவால்களைத் தாண்டித்தான் இன்றுவரை தமிழ் மக்களுக்கான அனைத்து அபிவிருத்திகளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகின்றார்.

தொடர்ந்தும் அவர்களது அபிவிருத்தியை மட்டும் முன்னெடுத்துச் செல்லாது அரசியல் தீர்வையும் முன்னிறுத்தி நிரந்தரமான உரிமைகளுடன் கூடிய தீர்வை பெற்றுக் கொண்டு தமிழ் மக்களை வாழவைக்க வேண்டும் என்றுதான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி போராடி வருகின்றது. முள்ளிவாய்க்காலில் அதிகளவான மக்கள் இறந்ததை நாங்கள் ஒருபோதும் மறக்கவில்லை. இந்த அழிவுக்கு தமிழர்கள் எங்கோ ஒரு தவறு செய்துள்ளோம் என்பது தான் உண்மை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# அந்தூரியத்துடன் ஒருவர் கைதானார்

பாங்கொக்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 158 அந்தூரியத்துடன் இலங்கை பிரஜை ஒருவரை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கப்பிரிவினர் நேற்று கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர், மினுவாங்கொடையைச் சேர்ந்தவர் என்றும் பூக்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர் என்றும் சுங்கப்பிரிவினர் அறிவித்தனர்.

சந்தேக நபருக்கு 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட அந்தூரியக் கன்றுகள் அரசுடைமையாக்கப்பட்டு பேராதனை பூங்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அப்பிரிவு அறிவித்துள்ளது.


தாவர உற்பத்தி பாதுகாப்பு சட்டத்தை மீறியே, அவர் இந்த அந்தூரியக் கன்றுகளை நாட்டுக்குள் கொண்டுவந்ததாக சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 140 |
| தக்காளி | 50 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 60 |
| கோவா | 60 | 70 | 80 |
| கரட் | 100 | 100 | 120 |
| பூசணி | 20 | 80 | 40 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 50-100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 90 | 50 | 100 |
| பயற்றங்காய் | 60 | 100 | 60 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 40 | 60 | 60 |
| போஞ்சி | — | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-35 | 30 | 25-35 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 131

டொறின் மன்மதநாயகம்




ராகுலன் பாலா





மதீசன் கணேஷ்

கல்யாணத்துல...
"மச்சி... அந்த க்ரீன் கலர் சுடிதார் யாரு...?"
" தங்கச்சிடா..."
" சாரி மச்சி... அப்ப பக்கத்துல இருக்கிற பிங்க் சுடிதார்...?"
" தங்கச்சிடா..."
மறுபடியும் "சாரி மச்சி... அப்ப... மேடையில நிக்குதே... புளு சுடிதார்...?"
"அதுவும் தங்கச்சிடா..."
"அடேய்... உனக்கு மொத்தம் எத்தனை தங்கச்சிடா...?"
"ஹி..,ஹி..,ஹி..,... இவ்ளோ நேரம் நான் தங்கச்சினு சொன்னது எனக்கில்லமச்சி... உனக்குத்தான்...!!"
"அட நாயே...!"

இராமநாதன் சிந்துஜன்




சுபாகீதன் சத்தியமூர்த்தி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் இங்கிலாந்தை சேர்ந்த 60 பெண்கள்

சிரியா மற்றும் ஈராக்கில் தீவிர இஸ்லாமிய ஆட்சியை செயல்படுத்த கடுமையாகப் போராடிவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தில் உள்ள சிரியா காவல் பிரிவில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 60 பெண்கள் பணியாற்றி வருவதான தகவல் தற்போது வெளிவந்துள்ளது.

சிரியாவின் ரக்கா நகரத்தில் செயற்பட்டுவரும் இந்த அல் கன்சா பிரிவு போராளிகளின் கட்டுப்பாட்டில் அவர்களின் தலைமையகமாக செயற்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட இந்தப் பிரிவானது பெண்கள் வேடத்தில் பணி புரியும் ஆண்களைக் கண்டுபிடிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது என்று பயங்கரவாத ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த பிரிவினரில் தனியார் கல்வியில் பயின்று கடந்த நவம்பர் மாதம் சிரியாவிற்குத் தப்பிச் சென்ற 20 வயது நிரம்பிய கிளாஸ்கோ பகுதியின் அக்சா மக்மூதுவை குறிப்பிடத்தக்க புள்ளியாக பிரிட்டனை மையமாகக் கொண்ட சரவதேச ஆய்வு மையம் ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும் இவர்களில் பெரும்பாலானோர் 18 வயதிலிருந்து 24 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் மூன்று பேர் இராணுவப்பிரிவில் பணியாற்றி வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடும் இவர்கள் பயங்கரவாதச் செயல்களில் தொடர்பு கொள்வதில்லை என்றும் இவர்களுக்கு மாதச் சம்பளமாக 161 டொலர் வழங்கப்படுகின்றது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தவிர, உம் அல் ரயான் என்ற மற்றொரு பெண்கள் குழுவும் இதே சமயத்தில் உருவாக்கப் பட்டுள்ளதாக 'இன்டிபெண்டன்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது. (இ)

## எபோலாவுக்கு 1089 பேர் பலி!

எபோலா' என்ற வைரஸ் நோய் மேற்கு ஆபிரிக்காவில் உள்ள சியரா லியோன், லைபீரியா, நைஜீரியா, கினியா ஆகிய நாடுகளில் கடுமையாக பரவியுள்ளது. இந்த நாடுகளில் மட்டும் எபோலா நோய் தாககி 2ஆயிரத்து 100 பேர் பலியாகியுள்ளனர்.

அவர்களில் லைபீரியாவில் மட்டும் ஆயிரத்து 89 பேர் உயிரிழந்துள்ளனர். இவை தவிர கினியாவில் 517 பேரும், சியாரா லியோனில் 491 பேரும், நைஜீரியாவில் 8 பேரும் இறந்துள்ளனர்.

இந்த தகவலை உலக சுகாதார நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. பலியானவர்களில் 79 பேர் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள் உள்ளிட்ட சுகாதாரத்துறை பணியாளர்கள் ஆவர். எனவே அவர்கள் பாதுகாப்பு கவச உடை அணிந்துள்ளனர்.

இந்த நிலையில் எபோலா நோய் லைபீரியாவில்தான் அதிக அளவில் தாக்கம் உள்ளது. இங்கு ஆயிரக் கணக்கானவர்கள் இந்நோய் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர்.

அதிகம் பாதித்துள்ள மான்ஸ்ராடோ பகுதியில் சிகிச்சை அளிக்க குறைந்தது ஆயிரம் படுக்கை வசதிகள் தேவைப்படுகிறது. ஆனால் 240 படுக்கைகள் மட்டுமே உள்ளன. (இ)

# மோதல்களுக்கு மத்தியில் ஈராக்கில் புதிய அரசாங்கம்

(தெஹ்ரான்)

ஈராக்கில் மோதல்கள் இடம் பெற்றுவரும் நிலையில் அந்நாட்டில் ஒன்றிணைந்த புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ளது.

ஈராக்கின் புதிய பிரதமராக ஹைதர் அல் அபாதி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை குர்திஷ் இனக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பிரதிப் பிரதமர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஈராக்கின் பாதுகாப்பு அமைச்சராக ஹைதர் அல் அபாதி செயற்படவுள்ளதோடு இப்ராஹிம் ஜபாரி வெளியுறவுத்துறை அமைச்சராக பதவியேற்றுள்ளார்

பல அரசியல் முட்டுக்கட்டைகளுக்கு பிறகே ஈராக்கில் புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ளது.

ஈராக்கில் புதிய அரசாங்கத்துக்கு எதிராக எதிர்ப்பினை வெளியிட்டு வந்த ஸலேஹ் அல் முட்லக் மற்றும் ஹோஷ்யர் ஸெபாரி ஆகியோர் அதிகாரப் பகிர்வுக்கு பின்னர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ளமை ஈராக் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வினை எட்டுவதற்கான ஒரு மைல் கல்லாகும் என அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (இ)

# விமானம் விழுந்து நொறுங்கியதில் விமானிகள் உட்பட பத்துபேர் மாயம்

தென்அமெரிக்காவில் உள்ள கொலம்பியாவில் அராராகுராவில் இருந்து புளோரென்சிகாவுக்கு ஒரு சிறிய ரக விமானம் ஒன்று நேற்று முன்தினம் புறப்பட்டு சென்றது. அதில் 10 பேர் பயணம் செய்தனர். அவர்களில் 2 பேர் விமானிகள். கொலம்பியாவின் அராராகுரா விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சிறிய ரக விமானம் ஒன்று, புளோரன்சியா நகரின் மீது பறந்து கொண்டிருந்தபோது மாலை 3 மணியளவில் விமான கட்டுப்பாட்டு மையத்துடனான தொடர்பை இழந்தது.

இந்நிலையில், போர்டோ சாண டாண்டர் நகரிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள அமேசன் காட்டுப் பகுதியில் அந்த விமானம் விழுந்து நொறுங்கியிருப்பதாகவும், அதன் சிதைந்த பாகங்களை கண்டறிந்துள்ளதாகவும் சிவில் விமான போக்குவரத்து ஆணையம் அறிவித்துள்ளது. அதில் பயணம் செய்த 8 பயணிகள் மற்றும் 2 விமானிகளை தேடும் பணி நடைபெற்று வருகிறது. அவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கக் கூடும் என்று கருதுவதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (இ)

# விமானம் பறக்கத் தடை விதிப்போம்

## ரஷ்யா கடும் எச்சரிக்கை

உக்ரைனின் கிழக்கு பகுதியில் மெஜாரிட்டி ஆக வாழும் ரஷ்ய ஆதரவாளர்கள் தங்களுக்கு தன்னாட்சி உரிமை கோரி போராட்டம் நடத்தினார்கள். அது தீவிரமடைந்து உள்நாட்டு போர் ஆக மாறியது. அதில் 3ஆயிரம் பேர் வரை பலியாகினர்.

கிழக்கு உக்ரனை சேர்ந்தவர்களுக்கு அண்டை நாடான ரஷ்யா ஆயுதம் மற்றும் நிதி உதவி வழங்குவதாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் குற்றம்சாட்டின.

எனவே ரஷ்யாவுக்கு பொருளாதார தடை விதித்தன. அதைத் தொடர்ந்து தற்போது உக்ரைன் அரசுக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ பொரொ ஷென்கோ ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தி போர் நிறுத்தம் ஏற்படுத்தினர்.

இந்த நிலையில் ரஷ்யா மீது மேலும் பொருளாதார தடை விதிக்க அமெரிக்கா மற்றும் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் முடிவு செய்துள்ளன.

இதற்கு ரஷ்ய பிரதமர் டிமித்ரி மெத்வதேவ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மீது விதிக்கப்படும் பொருளாதார தடையை எதிர்த்து நின்று மாற்றும் சக்தி சீனா போன்று எங்களுக்கும் உண்டு. எங்கள் மீது பொருளாதார தடை விதித்தால் மேற்கத்தேய நாடுகளின் விமானங்கள் எங்கள் வான் எல்லையில் பறக்க தடை விதிப்போம்.

இதன்மூலம் மேற்கத்தேய நாடுகளின் பல நிறுவனங்கள் திவாலாகும் நிலை ஏற்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



விளா

Botanical Name-Feronia elephantum

Family-Rutaceae

Engl-Wood apple

Sinh-Divul

முள்ளுடைய இலையுதிர் மரமாகும். 20 மீற்றர் உயரம் வளரக் கூடியது. பட்டை அதிக ஆழமின்றி பிளவுபட்டிருக்கும். இலைகள் மாற்று இலை அடுக்கில் அமைந்தவை. கூட்டிலை ஒற்றை சிற்றிலையில் முடியும் இறகு வடிவான கூட்டிலை இலைக்கோணத்தில் முட்கள் உள்ளன. வலுவானவை, நேரானவை சிற்றிலைகள் 3-9 ஆப்பு வடிவானவை.

இலைக்காம்புகள்-இறகுகொண்டவை. மலர்கள் இருபாலானவை. கனிகள் பெரியவை. 8 சென்ரி மீற்றர் விட்டமுடையவை. கோணவடிவான கனிந்த கனியில் மேல் உறை ஓடு போன்றது. ஓரறை கொண்டது. விதைகள் பல நீள்வட்ட வடிவின. அமுங்கியவை தையிலிருந்து சித்திரை வரை மலர்வன.

**பரம்பலும் இனவிருத்தியும்**

இது ஓர் வெப்பமண்டல பழமரமாகும். எல்லா வகை மண்களிலும் வளரும். பொதுவாக விதை மூலமாக இனவிருத்தி அடைகின்றது. வேர்விட்ட மரத்துண்டுகள் பதியன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விதைத்த ஓராண்டிற்கு பின் நாற்றுகள் பிடுங்கி நடப்படுகின்றன. நட்ட 5 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும். இம்மரம் வரட்சியை தாங்கி வளரும்.





**100 கிராம் விளாம்பழத்திலுள்ள சத்துக்கள்**

புரதம்-7.1 கி, கொழுப்பு-3.7கி, நார்ப்பொருள் 5.0 கி, காபோவைதரேற்று 18.1 கி, கல்சியம் 130 மி.கி, பொஸ்பரஸ்-110 மி.கி, தயமின்-0.6 மி.கி, ரைபோபிளேவின்-0.04 மி.கி, விற்றமின் சி-3 மி.கி, ஒக்ஸாலிக் கமிலம்-272 மி.கி, கரோட்டின்-61 மைக்ரோகிராம், இரும்பு- 0.6 மி.கி.

**மருத்துவ பயன்கள்**

◆ விளாம்பழத்திற்கு சூடைத் தணித்து குளிர்ச்சியைத் தரும் தன்மையுண்டு. பழம் உடலுக்கு வலுவைக் கொடுக்கும். கல்லீரல் நோய்க் கோளாறுகள், இருமல், இருதய நோய்கள், வாந்தி, களைப்பு, தாகம் தீரும்.

◆ பழச்சதையினை சாப்பிட தொண்டைப் புண் குணமாகும்.

◆ முக்கால் பழத்தின் கயர் நீரிழிவு நோயை போக்கும்.

◆ விளாம்பழத்துடன் சீனி சேர்த்து தினமும் காலையில் சாப் பிட பித்த நோய்கள் தீரும்.

◆ பழத்தின் மணப்பாகு பித்த நோய்களை போக்கும்.

◆ விளாம்பழத்தை சுட்டு அதன் சதையை எடுத்து மிளகாய், வெங்காயம், உப்பு, கொத்தமல்லி, துவரம் பருப்பு, வறுத்து சேர்த்து துவையல் அரைத்து உணவுடன் சாப்பிடலாம். பித்த நோய்கள், தலைசுற்று நீங்கும்.

**உணவுப் பொடி**

விளாந்தளிர், நாரத்தையின் தளிர், கறிவேப்பிலை, எலுமிச்சையிலை, ஓரே அளவு உலர்த்திய பொடி 100 கிராம், மிளகு 100 கிராம், வெந்தயம் 10 கிராம், கடலைப்பருப்பு வறுத்த பொடி 100 கிராம், உப்பு 20 கிராம் சேர்த்து கலந்த பொடி உணவில் சேர்த்து சாப்பிட உடலுக்கு ஊட்டமுண்டாக்கும்.

◆ இதன் தளிர் இலையை அரைத்து 10 கிராம் மோரில் 3 வேளை சாப்பிட வயிற்றோட்டம் தணிந்து வயிற்றுக் கடுப்பு குணமாகும்.

◆ குட்டிவிளா என்பது தரையோடு படர்ந்திருக்கும் விளாவின் இளஞ் செடியாகும். இவ் இலைகளை சேகரித்து குழந்தைகளின் உடலில் தேய்த்து குளிப்பாட்ட தோல்நோய்கள் வராது.

◆ விளாங்காயை உடைத்து உள்ளே உள்ள சதையை எடுத்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து அரை டம்ளர் அளவு தயிரில் கலந்து 3 நாள் கொடுக்க சீதபேதி தீரும்.

◆ இதன் இலைச்சாற்றை பித்த வெடிப்புக்கு பூசலாம்.

◆ இலைக் கொழுந்தை நன்றாக அரைத்து உடலின் மீது உண்டாகி இருக்கும் வியர்வைக்கு பூசலாம்.

விளாம்பிசின்: பிசினை பாலில் ஊறவைத்து சீனிகலந்து அருந்த நரம்புத்தளர்ச்சி, பலக்குறைவு, வெள்ளை நோய் தீரும். நீரிழிவு நோயாளிகளும் பயன்படுத்தலாம். அவர்கள் பிசினை ஆடை நீக்கிய பாலில் ஊறவைத்து எடுத்தல் வேண்டும்.


விளாமரப்பிசினை உலர்த்தி பொடித்து தினமும் காலையில் 1-2 கிராம் தேனில் குழைத்து எடுக்க வறட்டிருமல், நெஞ்செரிவு ஆகியன தீரும். இதன் பழக்களை ஆடி மாதத்திலிருந்து ஐப்பசி வரை பெறக் கூடியதாக இருக்கும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன் M.D (Siddha) India
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






கிரகங்களில் வியாழன்தான், வேகமாக சுற்றக்கூடியது. இது, 10 மணி நேரத்துக்குள் தன்னைத் தானே ஒருமுறை சுற்றி முடிக்கிறது!







# சுட்டி அட அப்படியா?

தாஜ்மஹாலைக் கட்டிமுடிக்க 11 ஆண்டுகள் (1632- 1643) ஆனது!


ஒட்டகத்தைவிட, ஒட்டகச்சிவிங்கி தண்ணீர் அருந்தாமல் நீண்ட தூரம் செல்லும்!



போலார் கரடிகள், ஓய்வே இல்லாமல் சுமார் 96 கிலோ மீட்டர் நீந்தக்கூடியவை!



ஹட்டில்ஃபிஷ் எனும் மீனுக்கு 3 இதயங்கள்!



ஈஃபிள் கோபுரத்தின் சராசரி எடை 9,441 தொன்கள்!




- 1759 - பாண்டிச்சேரியில் பிரெஞ்சுக் கடற்படைகளுக்கும ஜோர்ஜ் போக்கொக் தலைமையிலான பிரித்தானியக் கடற்படைக்குமிடையில் போர் வெடித்தது. பிரெஞ்சுக் கப்பல் பலத்த சேதத்துடன் பின் வாங்கியது.
- 1823 - சிமோன் பொலிவார் பெருவின் ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார்.
- 1840 - ஓட்டோமான், மற்றும் பிரித்தானியப் படைகள் பெய்ரூட் நகர்மீது தாக்குதலைத் தொடுத்தனர்.
- 1846 - எலியாஸ் ஹோவ் தையல் இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1858 - 55 பண்டோரா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப் பட்டது.
- 1898 - ஆஸ்திரியாவின் அரசி எலிசபெத் கொலை செய்யப் பட்டார்.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: கனடா ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மானியப் படையினர் உரோம் நகரினுள் நுழைந்தனர்.
- 1951 - ஐக்கிய இராச்சியம் ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை அறிவித்தது.
- 1967 - கிப்ரல்டார் மக்கள் பிரித்தானியாவின் கீழ் தொடர்ந்திருக்க வாக்களித்தனர்.
- 1974 - கினி பிசாவு போர்த்துக்கல்லிடமிருந்து விடுதலைப் பெற்றது.
- 2002 - சுவிட்சர்லாந்து, ஐ. நாவில் இணைந்தது.

பிறப்புகள்

- 1974 - பென் வாலஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர


இறப்புகள்

- 1975 - ஜோர்ஜ் தொம்சன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1892)
- 1983 - ஏ. கே. செட்டியார், காந்தி பற்றிய ஆவணப்படத்தை முதன முதலில் தயாரித்தவர் (பி. 1911)
- 1983 - பீலிக்ஸ் புளொக், சுவிசில் பிறந்த இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1905)
- 2008 - வி. கே. தானமூர்த்தி, ஈழத்து நாதஸ்வரக் கலைஞர் (பி. 1948)



பிரேசில் நாடுதான் உலகிலேயே அதிகளவில் ஒரேஞ்சு பழங்களை உற்பத்தி செய்கிறது!

ஹார்ஃபிஷ் எனும் மீனுக்கு அதன் எலும்புகள் பச்சை நிறத்தில் இருக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




...எனவே, புதிதாக யாராவது பௌலிங் செய்ய வேண்டும் என்பது அசாரின் எண்ணம். கபிலை பந்து வீசச் சொல்லி அசாருக்கு செய்தி அனுப்பினார் வடேகர். ஆனால், அதில் கபிலுக்கு விருப்பம் இல்லை. இந்தக் குழப்பம் ஒருசில வினாடிகள் நீடிக்க திடீரென்று சச்சின் நுழைந்து தான் பௌலிங் செய்வதாகக் கூறினான். தானே முன் வந்து பௌலிங் போடுவதாகச் சொன்னதால், அசாரும் மறுப்பு ஏதும் சொல்லவில்லை. காரணம் சச்சின்மீது அசாருக்கு இருந்த அபார நம்பிக்கை. 6 பந்துகள் 6 ரன்கள் 2 விக்கெட்டுக்கள் என்று இறுக்கமான சூழலில் சச்சின் தைரியமாகப் பந்து வீசத் துவங்கினான். அந்தப் போட்டியில் அவன் வீசப்போகும் முதல் ஓவரும் அதுதான். சச்சின் அதிர்ஷ்டம் பாருங்கள். முதல் பந்தை மாக்மிலன் அடித்துவிட்டு ஒரு ரன் ஓடினார். பந்து வருவதற்குள் இரண்டாவது ரன்னையும் எடுத்தால் மாக்மிலன் மீண்டும் ஆட வாய்ப்பு கிட்டும். எனவே, மீண்டும் ஓடத் துவங்கி கிரீஸை எட்டுவதற்கு முன்பு அங்கோலா வீசிய பந்து ஸ்டம்பை



எகிற வைத்தது. ஃபேன் டீ வில்லியர்ஸ் ரன் அவுட் ஆனார். புதிதாக களம் இறங்கிய டொனால்ட் ஒரு ரன் எடுத்தார். இப்போது இருப்பது 1 பந்து. இதில் 4 ரன்கள் அடித்தே ஆக வேண்டிய கட்டாயம் மாக்மிலனுக்கு. கொல்கத்தாவில் கூடியிருந்த 1 லட்சம் ரசிகர்களும் சீட் நுனிக்கே வந்து விட்டனர். ஒரு ஃபோர் அல்லது சிக்சர், தென் ஆபிரிக்கா வெற்றிபெறும். இவற்றை அடிக்கத் தவறும் பட்சத்தில் இந்தியாவிற்கு வெற்றி. இதோ சச்சின் தனது கடைசி பந்தை மாக்மிலனுக்குப் போடுகிறார். பந்தை அடித்து விளையாட மட்டையை ஓங்கினார் மாக்மிலன். ஆனாலும் பயன் இல்லை. பந்து மட்டையின் ஓரத்தில் பட்டு மைதானத்தில் மெதுவாக உருளத் துவங்கியது. ஆக மாக்மிலனால் எடுக்க முடிந்தது ஒரே ஒரு ரன்தான்.

மைதானமே சச்சினின் சிறப்பான பௌலிங்கிற்காக கைதட்டி ஆரவாரம் செய்து வரவேற்றது. ரன் எடுக்க முடியாமல், சச்சினின் பௌலிங் மாக்மிலனைக் கட்டிப்போட்டது என்று சொல்லலாம்.

தென் ஆப்பிரிக்கா சுலபமாக ஜெயிக்க வேண்டிய போட்டி இது. சச்சினால் இந்த வெற்றி இந்தியாவிற்கு சாதகமாக மாறியது. இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

### பௌலராக சச்சின் புதிய அவதாரம்

அதுவரை அதிரடி பேட்ஸ்மெனாக வலம் வந்துகொண்டிருந்த சச்சின் இந்தப் போட்டியின் மூலம் திசையையே மாற்றி அமைக்க வல்ல பௌலராக அவதாரம் எடுத்தான். சச்சின் சுழற்பந்து வீச்சாளர் என்று அடைமொழி குத்தப்பட்டு இருந்தாலும் சச்சின் வீசும் ஒவ்வொரு பந்தும் ஒவ்வொரு ரகமாக இருக்கும். லெக்ஸ்பின், ஆஃப்ஸ்பின், கூக்ளி, மிதமான வேகம், மெதுவான பந்து என சச்சின் எந்த ரகமான பந்து வீச்சாளன் என அவனுக்கே தெரியாத அளவிற்கு ஒரு பௌலர். ஆக, ஒரு விதத்தில் இது சச்சினுக்கு அனுகூலம்தான். காரணம், சச்சின் பந்து எப்படி வரும் என்று பேட்ஸ்மெனால் அனுமானம் செய்யவே முடியாது. வைச்சா குடுமி, அடிச்சா மொட்டை என்பதுபோல் சச்சின் வீசும் பந்து பேட்ஸ்மென் அடிக்கும் அடியில் மைதானத்தைத் தாண்டி பறக்கும். ஆனால் அடுத்த பந்தோ பேட்ஸ்மெனை ஏமாற்றி இடையே புகுந்து விக்கெட்டைச் சாய்த்துவிடும். ஆக, சச்சின் என்ன ரகமான பௌலர் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். சச்சின் எந்த ரகமான பௌலராக இருந்தால் என்ன? விக்கெட் எடுத்தால் சரி என்கிறீர்களா? அதுவும் சரிதான்!

மற்றொரு அரை இறுதிப்போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி இலங்கையைத் தோற்கடிக்க இந்தியாவுடன் மோத மேற்கு இந்திய அணி தயாரானது. அதே கொல்கத்தா ஈடன் கார்டனில் பிரம்மாண்ட ரசிகர் கூட்டத்திற்கு முன்பு இரு அணிகளும் களம் இறங்கின. இந்தியா 7 விக்கெட்டுக்களுக்கு 225 ரன்கள் எடுக்க மேற்கு இந்தியா 123 ரன்களுக்கு சுருண்டது. இதற்கு முக்கியக் காரணம் அனில் கும்ப்ளே.

கே. ரமேஷ் (தொடரும்)

> சச்சின் சுழற்பந்து வீச்சாளர் என்று அடைமொழி குத்தப்பட்டு இருந்தாலும் சச்சின் வீசும் ஒவ்வொரு பந்தும் ஒவ்வொரு ரகமாக இருக்கும். லெக்ஸ்பின், ஆஃப்ஸ்பின், கூக்ளி, மிதமான வேகம், மெதுவான பந்து என சச்சின் எந்த ரகமான பந்து வீச்சாளன் என அவருக்கே தெரியாத அளவிற்கு ஒரு பௌலர்!

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 13

பரமஹம்ஸ சுவாமி

....இது நிகழுமானால் உங்கள் அறிவு அதன் உச்சத்தில் இருக்கிறது என்று சொல்ல முடியும். ஏனெனில் ஆற்றலே அறிவாகும். இது நிகழுமானால், நீங்கள் தீர்மானங்களை நுண்ணறிவு என்று அழைக்கப்படும் ஆற்றலிலிருந்து எடுக்கிறீர்கள்; இங்கு உங்களுக்கு வெறுமனே மிகவும் தெளிவாகத் தெரிகிறது.


நீங்கள் இந்த நுண்ணறிவு நிலையிலிருக்கும் பொழுது tp ஐ விட tq அதிகமாக இருக்கிறது. நீங்கள் தீர்மானங்களை உங்கள் நுண்ணறிவின் ஆற்றலிலிருந்து ஆழந்த விழிப்புணர்விலும் அமைதியிலும் ஆனந்தத்திலும் எடுக்கிறீர்கள்.

இந்தக் கருத்தை ஆழந்து புரிந்து கொள்ள வேண்டும். நான் நுண்ணறிவு என்று எதைச் சொல்கிறேன் என்று அறிவியல்பூர்வமாக ஆழந்து சென்றால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். நுண்ணறிவு என்பது புத்திக்கு அப்பாற்பட்ட ஒரு நிகழ்வு.

**நுண்ணறிவு என்றால் என்ன?**

இதை உங்களுக்கு விளக்குகிறேன். திடீரென்று உங்களுக்கு ஏதோ ஒன்று சரியென்றுபடுகிறது. அதைச் செய்வதற்கான சக்தியும் இருக்கிறது. ஆனால், வழிமுறைகள் மட்டும் தெரியவில்லை. உங்களுக்கு நனறாகத் தெரியும், உங்களுடைய முடிபு அல்லது தீர்மானம் மிகவும் சரியென்று. ஆனால், எவ்வாறு அந்த முடிபெடுத்தீர்கள் என்பது மட்டும் தெரியவில்லை. இதுவே நுண்ணறிவு.

இதற்கு முன் நிகழ்ந்திராத ஒரு சூழ்நிலையை எதிர்கொள்ள நுண்ணறிவின் ஆற்றல் தேவைப்படுகிறது. மிகக் குறைந்த அளவு தகவல்களுடன் ஒரு முடிபெடுக்க முடியாமல் நீங்கள் திணறும் பொழுதோ நுண்ணறிவின் ஆற்றல் உங்களுக்கு உதவுகிறது. இது போன்ற சூழ்நிலைகளில் மட்டுமல்லாமல்.... உங்களால் இருப்புத் தன்மையின் இந்த நிலையிலேயே தொடர்ந்து இருக்க முடியுமானால் உங்களால் ஒவ்வொரு கணத்திலும் முழுமையாக இருக்க முடியும். இனிவரும் கணங்களும் அதுபோன்றே அமையவும் அது ஒரு வித்தாகும். இப்பொழுது நான் சொல்வதை உங்களால் கிரஹித்துக்கொள்ள முடிந்தால் நீங்கள் உங்களுடைனேயே சில நிமிடங்கள் அமர்ந்து உங்களுள் உள்ள பதிவுகள் எத்தகைய ஒரு பேரழிவை ஏற்படுத்தி உங்களுக்குப் பெரும் சுமையாக இருக்கிறதென்பதையும் உங்களால் பார்க்க முடியுமானால் இந்தச் சூழலைவிட்டு வெளியே வருவதற்கான சூட்சுமத்தை கொஞ்சம் கொஞ்சமாக அறிந்துகொண்டு உங்கள் இருப்புத்தன்மையின் உயர்ந்த நிலைக்குச் செல்ல முடியும். நுண்ணறிவு பற்றிய இன்னொரு விடயம்.... அது தீர்மானிப்பதற்கு மட்டுமல்லாமல் அதைச்செய்து முடிப்பதற்கான ஆற்றலையும் வழங்குகிறது. இதை நான் மக்களிடம் சொல்



லும் பொழுது அவர்கள் கேட்கிறார்கள், ஸ்வாமிஜி என்னிடம் இருப்பது நுண்ணறிவா? அல்லது வெறும் புத்திசாலித்தனமா? என்பதை எவ்வாறு அறிந்து கொள்வது? அவர்கள் கேட்கிறார்கள், ஸ்வாமிஜி இது புத்திசாலித்தனமா? அல்லது நுண்ணறிவா? என்று குழப்பமாக இருக்கிறது என்று. நான் சொல்கிறேன், இவ்வாறு குழப்பமாக இருக்குமாயின் அது புத்திசாலித்தனம் தான்; இதில் தெளிவாக இருங்கள். குழப்பமே அது புத்திசாலித்தனம் என்பதைக் காட்டிக் கொடுத்துவிடுகிறது. உங்களிடம் நுண்ணறிவு இருந்தால் நீங்கள் சரியாக நிச்சயமாகவும் சக்தியால் தளும்பிக்கொண்டும் இருப்பீர்கள். அங்கு குழப்பத்திற்கு இடமேயிருக்காது.

நுண்ணறிவில் உங்கள் இருப்புத் தன்மையின் உள்ளிருக்கும் ஆற்றல் சாதாரணமாகவே வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் திறந்து மிகவும் சுலபமாக அதை வெளிப்படுத்துகிறீர்கள்; செயற்படுத்துகிறீர்கள். விஞ்ஞானிகள் மற்றும் பெரிய கம்பனிகளின் தலைமை நிர்வாகிகள் அவர்கள் துறையில் ஏதேனும் ஒரு பெரிய சாதனையை நிகழ்த்தும்பொழுது தங்கள் வெற்றிக்குக் காரணம் தங்கள் புத்திக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்று.... (தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழக முதலமைச்சருக்கு அவதூறு ஏற்படுத்திய சுப்பிரமணியம் சுவாமிக்கு எதிராகப் போராட்டம்!

## தயாராகும் அ.தி.மு.க.

(சென்னை)

மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் பா.ஜ.க.வின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமியின் கருத்து, தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதாக கூறி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்க வேண்டாம் என்று பா.ஜ.க.வின் மூத்த தலைவர் சுப்பிரம்ணியன் சுவாமி கூறியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, முதல்வர் ஜெயலலிதா பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

இந்தக் கடிதத்துக்கு பதில் கடிதமாக பிரதமருக்கு சுப்பிரமணியம் சுவாமி ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அதில் அந்தப் படகுகள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா மற்றும் டி.ஆர்.பாலுவுக்குச் சொந்தமானவை என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், அவரது இந்த கருத்து தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதாக கூறி, முதலமைச்சர் ஜெயலலிதா அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.

சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா சார்பில் மாநகர அரசு சட்டத்தரணி ஜெகன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.





சுப்பிரமணியம் சுவாமி மீது அவதூறு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில்கூறப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதேவேளை சுப்பிரமணியம் சுவாமிக்கு எதிராக தமிழகத்தில் மாபெரும் போராட்டங்களை தொடர்ந்து நடத்த அ.தி.மு.கவினர் தயாராகி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே தமிழகத்தில பல இடங்களில் சுப்பிரமணியம் சுவாமிக்கு எதிராக பல போராட்டங்கள் நடைபெற்றுள்ள நிலையில் மீண்டும் பாரிய போராட்டங்களுக்கு அ.தி.மு.க வினர் தயாராகி வருகின்றனர். (இ)

# சிறுவன் பலி; கடலில் மூழ்கிய ஆறுபேர் மீட்பு

(கொழும்பு)

பெந்தோட்டை அத்துருவெல்லை பிரதேசத்தில் கடலில் குளிப்பதற்காக சென்ற சிறுவனொருவன் (வயது 16) உயிரிழந்துள்ளதாக பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடலில் குளிப்பதற்காக சென்ற நான்கு இளைஞர்கள் உட்பட ஆறு பேர் கடலில் அடித்து செல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டனர்.

இருப்பினும் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்ட குறித்த சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதுடன் ஏனைய மூன்று இளைஞர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# புதிய ஆணையாளரை பீரிஸ் சந்தித்து பேச்சு!

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் இளவரசர் அல் ஹுசெய்னை, இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சந்திக்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தின் போது ஆணையாளர் அல் ஹுசெய்னை சந்திக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையுடன் புதிதாக உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்புவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள்மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையுடன் இலங்கை அரசாங்கம் சுமுகமான உறவுகளைப் பேணவில்லை.

மனிதவுரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டை நவநீதம்பிள்ளை கடுமையாக பின்பற்றி வந்தார். இதனால் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் பல்வேறு வழிகளில் தொடர்ந்தும் உறவுகள் பேணப்படவுள்ளதாக அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஆணையாளருடன் சுமுகமான உறவுகள் பேணப்படாத போதிலும், புதிய ஆணையாளர் அல் ஹுசெய்னுடன் வேறு விதமான உறவுகளை பேணுவதற்கு விரும்புவதாகவும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நேற்று முன்தினம் ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித வுரிமைகள் பேரவையின் 27 ஆவது பொதுக்கூட்டம் ஆரம்பமானது.

இந்த கூட்டத் தொடரில் இலங்கை அரசின் மீது கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் புதிய ஆணையாளரும் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை போன்று செயற்படுவார் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் புதிய ஆணையாளரை சமாளிக்க இராஜதந்திர ரீதியில் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. (இ)

# மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி மரணம்

(கொழும்பு)

பொல்பிட்டிகம, ஹக்வடுன பிரதேசத்தில் ஆறு ஒன்றில் குளிப்பதற்காக சென்ற பாடசாலை மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

குறித்த இரண்டு மாணவர்களும் நீரில் மூழ்கிய நிலையில் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

பொத்துஹெர பிரதேசத்தைச் சேர்ந்த பீ.ஏ.சஜீத் விதுரங்க (வயது 14) மற்றும் மெடிகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த புஷ்ப நிரஞ்சன ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.. (இ)

# உணர்ச்சிப் பேச்சுக்களின் ஊடாக உரிமையை வென்றெடுக்க முடியாது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)


உணர்ச்சிப் பேச்சுக்களாலும் நடைமுறை சாத்தியமற்றதுமான வழிமுறைகளில் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்பதுடன் எமது மக்களின் அரசியல் உள்ளிட்ட உரிமைகளையும் ஒருபோதும் வென்றெடுக்க முடியாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரிகள் தமது நியமனம் தொடர்பில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கோரிக்கைகள் நியாயத்தினதும் தேவைகளினதும் அடிப்படையில் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும்.

அதுவும் நடைமுறை சாத்தியமான வழிமுறைகளினூடாகவும் அரசின் கொள்கைத் திட்டங்களுக்கு அமைவாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதைவிடுத்து வீராவேசப் பேச்சுக்களாலும் உணர்ச்சிப் பேச்சுக்களாலும் எமது மக்களுக்கான அரசியல் உள்ளிட்ட உரிமைகளை ஒருபோதும் வென்றெடுக்க முடியாது என்பதுடன் தேசியப் பிரச்சினைக்கு நடைமுறை யதார்த்த வழிமுறைகளின் மூலமே தீர்வுகாண முடியுமென்பதே எமது நிலைப்பாடாகும்.



1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்படவிருந்த நிலையில் முதற்கட்டமாக வளாகமாக ஆரம்பிக்கப்பட்ட போது அப்போதைய தமிழர் தலைமைகள் எதிர்ப்பு தெரிவித்திருந்தன.

இருந்த போதிலும் அப்போதைய அரசு எதிர்ப்புக்களை மீறி வளாகத்தை நிறுவியதன் பயனாகவே யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகமாக பரிணாமம் பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்று எதிர்ப்பரசியல் செய்வதனால்எமது மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவது இல்லை.

இதன்காரணமாகவேநாம்இணக்க அரசியலைத் தெரிவு செய்து அதன் வழியூடாக மக்களுடைய வாழ்வாதாரத்தை பாதுகாத்து பலப்படுததும் வகையில்பல்வேறு பட்ட அபி விருத்தி செயற்றிட்டங்களை அரசின் கொள்கைத் திட்டங்களுக்கு அமைவாகவும் மக்களின் நலன்களை முன்னிறுத்தும் வகையில் நடைமுறைப்படுத்தி வரு கின்றோம் என்றும் தெரிவித்தார்.

இதன்போது பேராதனை பல் கலைக் கழகத்தில் வெளிவாரி பட்டதாரிகளாக தமது பட்டப் படிப்புக்களை 2012 ஆம் ஆண்டு பூர்த்தி செய்திருக்க வேண்டிய மாணவர்கள் விரிவுரையாளர்களின் வேலைநிறுத்தம் மற்றும் மாணவர்களின் விரிவுரை பகிஷ்கரிப்பு காரணமாக 2013 ஆம் ஆண்டுதான்பட்டப்படிப்புக்களை பூர்த்தி செய்திருந்தனர்.

இந்நிலையில் அதேயாண்டு நாடூராகவும் வழங்கப்பட்ட பட்டதாரி நியமனங்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் நியமனங்களின் போது உள்வாங்கப்படவில்லை. இந்நிலையிலேயே இச்சந்திப்பு இன்றைய தினம் இடம்பெற்றிருந்தது.

குறிப்பிட்ட நிலமையை கருத்தில் கொண்டு தமது நியமனம் தொடர்பில் உரிய நடவடிக்கை முன்னெடுக்குமாறு அமைச்சரிடம் பட்டதாரிகள் கோரிக்கை முன்வைத்த போது பட்டதாரிகளின் கருத்துக்களையும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது ஈ.பி.டி.பியின்சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், ஈ.பி.டி.பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் ஆகியோர்கலந்து கொண்டிருந்தனர். (இ)

# ஐ.தேசியக்கட்சி எம்.பியின் நலன் விசாரித்த ஜனாதிபதி

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெருமவின் உடல் நலம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசாரித்துள்ளார்.

மன்னப்பெரும எம்.பி.யின் மனைவி டாக்டர் மொனிகா மன்னப் பெருமவை தொடர்புகொண்டு, எம்.பி. குறித்து நலம் விசாரித்துள்ள ஜனாதிபதி, ஏதேனும் தேவைகள் இருந்தால், தயங்காமல் கேட்குமாறும் குறிப்பிட்டுள்ளார்.

விபத்தில் காயமடைந்த எம்.பி.யின் வலது கால் அகற்றப்பட்டுள்ள அதேவேளை, இடது காலும் விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ)

# பல்கலைக்கழக மாணவர் மூவருக்கு வகுப்புத் தடை

(கண்டி)

பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்களுக்கு ஒரு வார கால வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

மாணவர் சங்கத்தின் தலைவர் லசந்த அருண, முன்னாள் தலைவர் திமுது குணசேகர மற்றும் விலங்கு வைத்திய பீடத்தை சேர்ந்த மற்றொரு மாணவன் ஆகியவருக்கே இந்த வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டதற்கான காரணம் கூறப்படவில்லை. (இ)

# குழந்தை கடத்தல்


குருநாகல், வெல்லவ நிகந்தளுபொத்த எனுமிடத்தில் நான்கரை வயது குழந்தையை இனந் தெரியாத நபர்கள் கடத்தி சென்றுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறப்பர் சீட் அடிக்கப்பட்டிருந்த ஜன்னல் வழியாக வீட்டுக்குள் நுழைந்தே குழந்தையை கடத்திச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளின் தடை உடைத்தெறிய வைகோ படை

"இந்தியாவில் ஒரு அங்குல மண்ணைக கூட அவர்கள் கேட்க வில்லை. ஆனால், இந்தியாவோ தமிழீழம் என்பது தமிழ் நாட்டையும் சேர்த்து தான் என்கிறது. உலகம் முழுவதும் ஈழத் தமிழர்கள், தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் வாழும் இடங்களை எல்லாம் சேர்த்தா தமிழீழம் என்கிறார்கள்."



இந்திய அரசினால் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது விதிககப்பட்ட தடை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நீடிக்கப்பட்டு வந்தது. 2013 இல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, இரண்டுஆண்டுகள்தடையை ஐந்து ஆண்டுகளாக நீடித்துச் சட்டத் திருத்தம் செய்தது.

அந்த அடிப்படையில், இந்த ஆண்டு மே மாதம் விடுதலைப்புலிகள் மீதான தடை ஐந்து ஆண்டுகள் என்று அறிவிக்கப்பட்டது. அந்தத் தடையை நீக்கக் கோரி, தன்னையும் ஒரு தரப்பாகத் தீர்ப்பாய விசாரணையில் சேர்க்க வேண்டும் என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ மனுத் தாக்கல் செய்தார்.

தீர்ப்பாயத்தின் நீதிபதி ஜி.பி.மிட்டல் முன்னிலையில், டில்லியில் செப்டெம்பர் 3 ஆம் திகதி வைகோ மனு மீதான விசாரணை நடைபெற்றது. அப்போது வைகோ தனது வாதங்களை எடுத்து வைத்தார்.

நான் விடுதலைப் புலிகளின் முழு ஆதரவாளன். இலங்கையைத் தளமாகக் கொண்டு இயங்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு, இந்தியாவில் ஆதரவாளர்களும், அனுதாபிகளும், பிரதிநிதிகளும் இருக்கிறார்கள் என்று தடை ஆணை கூறுகிறது.

நான் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினேன என்பதற்காக, பொடா சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, 19 மாதம் சிறையில் இருந்திருக்கிறேன். இன்னமும் அந்த வழக்கு முடியவில்லை.

தற்போது சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. 2010 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளை நான் ஆதரித்துப் பேசினேன் என்பதற்காக, இதே சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ், என் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு, தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது.

2010 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தீர்ப்பாய நீதிபதி, விக்ரம்ஜித் சென் தனது இறுதித் தீர்ப்பில், மறுமலர்ச்சி தி.மு.க விடுதலைப்புலிகள் ஆதரவு இயக்கம் என்று குறிப்பிட்டிருந்தார்.

நான் அந்த இயக்கத்தின் பொதுச்செயலாளராக இருக்கிறேன். எனவே, என்னை இந்தத் தீர்ப்பாய விசாரணையில் ஒரு தரப்பாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இலங்கைத் தீவில் இலட்சக் கணக்கான ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அங்கு வாழ முடியாமல் உலகின் பல நாடுகளுக்கு ஈழத்தமிழர்கள் அடைக்கலம் தேடிச் செல்கிறார்கள்.

ஏழரைக் கோடித் தமிழர்கள் வாழுகின்ற தமிழ் நாட்டுக்கு ஈழத் தமிழர்கள் வருகிறார்கள். 2010 வரை புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று யாரையும் தமிழகத்தில் கைது செய்யவில்லை.

இந்த வாதத்தை நான் ஒவ்வொரு வழக்கிலும் முன்வைத்து வருவதால் 2010 இற்குப் பின்பு மத்திய அரசின் வழிகாட்டுதலுடன் தமிழக கியூ பிரிவு பொலிஸார் தஞ்சம் தேடி வரும், ஈழத் தமிழர்களை அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் பொய் வழக்குப் போட்டுச் சிறையில் அடைக்கிறது.

அதனால், ஈழத் தமிழர்களுக்கு நீதி மறுக்கப்படுகிறது.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தில் கூறியுள்ள சரத்துக்களின்படி விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்திருப்பது அபத்தமானது. அந்தச் சட்டத்தில் கூறியுள்ளது போல, இந்திய இறையாண்மைக்கோ, ஒற்றுமைக்கோ அவரகளால் எந்த ஆபத்தும் தீங்கும் இல்லை. தமிழீழ தாயகம்தான் அவர்களின் இலட்சியம். இலங்கையில் வடக்கு, கிழக்கு என்ற பூர்வீகப் பகுதியைத்தான் அவர்கள் கேட்கிறார்கள்.

அதற்கு ஆதரவாக தந்தை செல்வாவின் வட்டுக்கோட்டை தீர்மானம், மாவீரர்கள் தினத்தில் பிரபாகரன் உரையாற்றும் போது அவருக்கு பின்னால் இருக்கும் தமிழீழம **லோகோ** [illegible] மாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

இந்தியாவில் ஒரு அங்குல மண்ணைக்கூட அவர்கள் கேட்க வில்லை. ஆனால், இந்தியாவோ தமிழீழம் என்பது தமிழ்நாட்டையும் சேர்த்துதான் என்கிறது. உலகம் முழுவதும் ஈழத் தமிழர்கள், தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் வாழும் இடங்களை எல்லாம் சேர்த்தா தமிழீழம் என்கிறார்கள்.

புலிகள் மீது தடைபோட இந்திய அரசு சொல்லும் வாதம் அடிப்படையிலேயே அபத்தமானது,பிழையானது. ஈழத் தமிழர்களுக்குக் கேடு செய்யும் நோக்கத்தோடுதான் தடை கொண்டு வரப்பட்டுள்ளது.

தீர்ப்பாயம் மேற்கொள்ளும் விசாரணையில் புலிகள் அமைப்பின் நிர்வாகிகள் யாரும் ஆஜராகவில்லை.

எனவே, என்னை ஒரு தரப்பாக ஆஜராக அனுமதிக்க வேண்டும் என்று வைகோ தனது வாதங்களை எடுத்து வைத்தார்.

மத்திய அரசு வழக்கறிஞர் சஞ்சய் ஜெயின், வைகோ நல்ல நோக்கத்தோடு போராடியிருக்கலாம்.

ஆனால் அவர் விடுதலைப் புலிகளின் அமைப்பில் பொறுப்பாளராகவோ, உறுப்பினராகவோ இல்லை. எனவே, அவரை ஒரு தரப்பாக ஏற்கக் கூடாது.

அப்படி நீங்கள் அவருக்கு அனுமதி அளிப்பதாக இருந்தால், கடந்த தீர்ப்பாயங்களில் எவ்வகையான அனுமதி கொடுக்கப்பட்டதோ அதுபோன்ற அனுமதி கொடுக்கலாம என்று கூறினார்.


நீதிபதி ஜி.பி.மிட்டல், வைகோவை ஒரு தரப்பாக இந்த விசாரணையில் சேர்க்க முடியாது.

ஆனாலும், அவர் இந்த அமர்வு விசாரணையில் பங்கு ஏற்கவும், வாதங்களை முன் வைக்கவும் அனுமதி அளிக்கப்படுகிறது.

புலிகள் தடை மீதான தீர்ப்பாய விசாரணை செப்டெம்பர் 26, 27 திகதி களில் சென்னையில் நடை பெறும என்று அறிவித்தார்.

"இலங்கைத் தீவில் இலட்சக் கணக்கான ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அங்கு வாழ முடியாமல் உலகின் பல நாடுகளுக்கு ஈழத்தமிழர்கள் அடைக்கலம் தேடிச் செல்கிறார்கள். ஏழரைக் கோடித் தமிழர்கள் வாழுகின்ற தமிழ்நாட்டுக்கு ஈழத் தமிழர்கள் வருகிறார்கள்."

## சூடு பிடிக்கும் சென்னை



ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்கொய்தா- இலங்.கும் அச்சுறுத்தலா?



பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் தாஹிர் ராபிக் பட் மூன்றுநாள் பயணமாக கடந்த 28 ஆம் திகதி அதிகாலை கொழும்புக்கு வந்திருந்தார். இந்தப் பயணத்தின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட முக்கிய அரசியல், இராணுவத் தலைவர்களை அவர் சந்திப்பாரென்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் கொழும்பு வந்திருந்த பாகிஸ்தான் விமானப்படைத் தளபதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச சந்திக்கவில்லை. பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அவரை சந்தித்துப் பேசினார். இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்திக் கொள்வது குறித்து பேசப்பட்டது. அதில் இணக்கம் காணப்பட்டதாகவும்சுட செய்திகள்வெளியாகின.

பாகிஸ்தான் விமானப் படைத் தளபதியின் இந்தப் பயணத்துக்கு கொழும்பில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் இந்தியத் தரப்பின் அதிருப்தியை விலைகொடுத்து வாங்க விரும்பாமையே என்று கருதப்படுகிறது., பாகிஸ்தான் மற்றும் சீனப் படை அதிகாரிகள், வழமைக்கு மாறாக இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது குறித்தும், இலங்கைப் படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவது குறித்தும் இந்தியா அதிக கவலை கொண்டுள்ளதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த ஆண்டில் ஏற்கனவே பாகிஸ்தான் இராணுவ உயர்மட்டத் தளபதிகள் இருவர் இலங்கைக்கு வந்திருந்தனர். பாகிஸ்தான் இராணுவத் தளபதியும் இலங்கை வரவிருந்தபோதும் திடீரென அவரது பயணம் இரத்துச் செய்யப்பட்டது. இலங்கையுடனான பாகிஸ்தானின் அதிக நெருக்கமும் சீனாவுடன் விரிவடையும் நல்லுறவும் இந்தியாவுக்கு எரிச்சலூட்டும் விடயமாக மாறியிருந்த நிலையில்தான், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு அலகு விரிவாக்கப்பட்டது. புதிதாக பிரதிப் பாதுகாப்பு ஆலோசகராக லெப். கேர்னல் குரிந்தர் எஸ்.கிளேயர் என்ற இராணுவப் புலனாய்வு அதிகாரி நியமிக்கப்பட்டார்.

இதையடுத்தே பாகிஸ்தான் விமானப் படைத் தளபதியின் கொழும்பு பயணம் கடந்த மாத இறுதியில் இடம்பெற்றது. பாகிஸ்தான் மற்றும் சீனாவிலிருந்து வரும் உயர்மட்ட அதிகாரிகள், இப்போது திருகோணமலைக்கான பயணத்தை தவிர்ப்பதேயில்லை. சீனக்குடாவிலுள்ள விமானப்படைப் பயிற்சிக் கல்லூரியை அல்லது டொக்யார்ட்டில் உள்ள கடற்படைத் தளத்தை பார்வையிடுவது என்ற சாக்கில் திருகோணமலையின் கேந்திர முக்கியத்துவத்தை அவர்கள் அளவிட்டுச் செல்கின்றனர்.

இந்தியாவின் கேந்திர பொருளாதார நலன்கள் அதிகமுள்ள திருகோணமலைக்கு பாகிஸ்தான் விமானப்படைத் தளபதியும் சென்றிருந்தார். சீனக்குடா விமானப்படைத் தளத்துக்குச் சென்ற அவர், திருகோணமலைத்துறைமுகத்தையும் கடந்த 29 ஆம் திகதி சுற்றி பார்வையிட்டிருந்தார். ஆனால், அதுபற்றிய தகவல்களுக்கு ஊடகங்களில் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. அரசாங்கமே அந்த தகவல்களை கிட்டத்தட்ட இருட்டடிப்புச் செய்துவிட்டது.

இதற்கு இந்தியா கொண்டுள்ள கரிசனையும் ஒரு காரணமாக இருக்கலாம். அதேவேளை விமானப் பராமரிப்பு நிலையத்தை சீனாவுடன் இணைந்து ஆரம்பிக்கும் முடிவில் அரசாங்கம் உறுதியாகவே உள்ளது. அது எங்கு அமைக்கப்படும் என்று தீர்மானிக்கப்படவில்லை என்று அரசாங்கம் கூறி வந்தாலும் இம்மாத நடுப்பகுதியில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கொழும்பு வரும்போது இது தொடர்பான உடன்பாடும் கையெழுத்திடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விமானப்படையிடம் அதிகளவிலான சீனத் தயாரிப்பு விமானங்களே இருப்பதாகவும் அவற்றை சீனாவுக்கு அனுப்பி பழுது பார்க்க அதிகம் செலவு ஏற்படுவதாகவும் எனவேதான், விமானப் பராமரிப்பு நிலையத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கடந்தவாரமும் தெரிவித்திருந்தார் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய.

இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே, சீனப் பொறியியலாளர்கள் அந்த விமானப் பராமரிப்பு நிலையத்தில் இருப்பர் என்றும் உள்ளூர் அதிகாரிகளுக்குப் பயிற்சியளித்த பின்னர் அவர்கள் வெளியேறிவிடுவர் என்றும் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய விளக்கமளித்துள்ளார்.

இதற்கு இந்தியாவின் பிரதிபலிப்பு எவ்வகையானதாக இருக்கும் என்பதை, இந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்ட பின்னர், தெரிந்துகொள்ள முடியும். ஏற்கனவே, இந்த விமானப் பராமரிப்பு நிலையம் அமைப்பு தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் விளக்கம் கேட்டிருந்தார். ஆனால், அவர் சாதாரணமாகத்தான் கேட்டார் என்று அமைச்சர் பீரிஸ் பின்னர் விளக்கம் கொடுத்திருந்தார்.

கேந்திர முக்கியத்துவம்மிக்க திருகோணமலைத் துறைமுகச் சூழலில் சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தலையீடுகள் அதிகரித்து வருவதை இந்தியா அவ்வளவாக அனுமதிக்காது. இந்த விவகாரத்தில் இந்தியாவின் அணுகுமுறை எத்தகையது என்பதை தெரிந்துகொள்வதற்கான காலம் நெருங்கி வருவதாகவே தெரிகிறது.

அதேவேளை, பாகிஸ்தானில் அரசியல் நெருக்கடிகள் தீவிரமடைந்துள்ள கட்டத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் எல்லையில் ஏற்பட்டுவரும் மோதல்களும் இலங்கைக்கு கவலை தரும் ஒரு விவகாரமாகவே உள்ளது. இந்த அரசியல் நெருக்கடியால் கடந்தவாரம், பாகிஸ்தான் பயணத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இம்மாத நடுப்பகுதியில் இலங்கை மற்றும் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும் பாகிஸ்தானுக்குச் செல்வதற்கே திட்டமிட்டிருந்தார். அவரது பயணமும் கைவிடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசியல் பதற்றத்தை திசை திருப்புவதற்காக பாகிஸ்தான் எல்லையில் சண்டைகளை ஆரம்பிப்பதாக இந்தியா குற்றஞ்சாட்டுகிறது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பின்போது இந்தளவுக்கு இப்போது இந்திய- பாகிஸ்தான் உறவுகள் நல்ல நிலையிலில்லை. இந்தச் சூழலில் இலங்கையையும் பாகிஸ்தானுடன் நெருங்குவதை தடுக்க இந்தியா முனைவதாகத் தெரிகிறது.

பாகிஸ்தான்- இலங்கை நெருக்கம் தனது தென்பகுதி மாநிலங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உருவெடுக்கும் என்று இந்தியா அஞ்சுகிறது. கடந்தவாரம் அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் அய்மன் அல்- ஜவாஹிரி, தமது இயக்கத்தின் செயற்பாடுகள் தெற்காசியாவில் விரிவாக்கப்போவதாக விடுத்திருக்கும் எச்சரிக்கை இந்தியாவை இன்னும் உஷாரடையச் செய்துள்ளது.

அல்கொய்தா இயக்கத்தின் செயற்பாடுகளை இந்தியா, பங்களாதேஷ், பர்மா போன்ற நாடுகளுக்கு விரிவாக்கப் போவதாக விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை, இலங்கைக்கும் ஆபத்தானதே. இலங்கையில் அண்மைக்காலமாக பௌத்த அடிப்படைவாத அமைப்புகளின் செயற்பாடுகள், முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இதையே காரணம் காட்டி இஸ்லாமிய தீவிரவாதம் இலங்கைக்குள் ஊடுருவலாம் என்ற கருத்து ஏற்கனவே இந்தியாவினால் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உள்நாட்டிலோ வெளிநாட்டில் இருந்தோ எத்தகைய தீவிரவாத செயற்பாடுகளும் தலையெடுக்க அனுமதிக்க மாட்டோம் என்று, இலங்கை பாதுகாப்புத் தரப்பு கூறி வருகிறது.

அல்கொய்தாவின் எச்சரிக்கைக்குப் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் இதனைத் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிய பின்னர், தலிபான்களின் தீவிரவாத செயற்பாடுகள் இந்தியாவில் அதிகரிக்கும் வாய்ப்புகள் இருப்பதாக இந்தியா எதிர்பார்க்கிறது. அதற்கேற்ப ஆப்கானிஸ்தானின் அரசியல் மற்றும் பாதுகாப்பு உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்காக இந்தியா பெருமளவு நிதியைச் செலவிட்டும் வருகிறது. இத்தகைய நிலையில் அல்கொய்தாவின் எச்சரிக்கையை இந்தியா சாதாரணமாக எடுத்துக்கொள்ளாது.

ஒட்டுமொத்த தெற்காசியாவுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால், இலங்கையையும் அரவணைத்துக் கொள்ளவே இந்தியா முற்படும். அதேவேளை பாகிஸ்தானை இலங்கையிடமிருந்து மேலும் அந்நியப்படுத்தும் முயற்சிகளையும் அது தொடர்ந்து முன்னெடுக்கும். இந்தச் சூழலில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த இலங்கை இராணுவத்தின் அனுபவங்களை தனது நாட்டிலும் பிரயோகிக்கும் முயற்சிகளை நைஜீரியா தீவிரப்படுத்தியுள்ளது.

நைஜீரியாவில் இஸ்லாமிய போகோ ஹறாம் தீவிரவாத அமைப்பின் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன. அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் அந்த நாட்டு அரசாங்கம் திணறிவரும் நிலையில் கடந்த ஜுன் மாதம் கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய தலைமையிலான உயர்மட்டப் படை அதிகாரிகளின் குழுவொன்று நைஜீரியா சென்றிருந்தது.

கடந்த ஏப்ரல் மாதம், போகோ ஹறாம் தீவிரவாதிகள் 200 மாணவிகளைக் கடத்திச் சென்ற பின்னர், இலங்கை இராணுவத்தின் அனுபவங்களையும் உத்திகளையும் பயன்படுத்திக்கொள்ள நைஜீரியா முடிவெடுத்தது. அதற்கமைய இலங்கை இராணுவத்தின் ஆலோசனைகளைப்பெற விரும்புவதாக நைஜீரிய அரசாங்கம் இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தியதன் தொடர்ச்சியாகவே உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் குழு அங்கு சென்றது. இராணுவத்தைப் பலப்படுத்தி புலனாய்வு மற்றும் நவீன ஆயுத தளபாடங்களைக் கொண்டு எவ்வாறு தீவிரவாதத்தை தோற்கடிக்க முடியுமென்று அவர்கள் விளக்கமளித்திருந்தனர். நைஜிரிய பாதுகாப்பு படைகளின் தலைவர் எயர் சீவ் மார்ஷல் அலெக்ஸ் பெட்டாவே இதனை உறுதிப்படுத்தியிருந்தார்.

இந்தச் செய்தி வெளியான போதே இலங்கையின் போர்த் தந்திரங்களைக் கையாள்வது பொருத்தமற்றது என்றும் ஆபத்தானது என்றும் சர்வதேச நிபுணர்கள் பலரும் எச்சரிக்கை விடுத்திருந்தனர். விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்களைச் சுட்டிக்காட்டி அதன் விளைவாக சர்வதேச விசாரணையை அந்த நாடு எதிர்கொள்வதாகவும் அதே நிலையை நைஜீரியாவும் எதிர்கொள்ள நேரிடுமென் றும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன.

அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளும் நிலையில் நைஜீரிய அரசாங்கம் இல்லை. இந்த நிலையில் நைஜீரிய விமானப் படையின் மூத்த அதிகாரியான எயர் வைஸ் மார்ஷல் எம்.ஆர்.மூர்கன் தலைமையிலான 11 பேர் கொண்ட உயர்மட்டக்குழு கடந்தவாரம் கொழும்பு வந்திருந்தது. நான்கு நாள் பயணமாக வந்த இந்தக் குழுவின் முக்கிய நோக்கம், இலங்கை இராணுவத்துக்கான நலன்புரி வசதிகள் குறித்து ஆராய்வதேயாகும். இராணுவ பலத்தையும் அவர்களுக்கான வசதிகளையும் அதிகரிப்பதன் மூலம் படையினரின் போரிடும் திறனை வளர்க்கலாம் என்பதே இலங்கை இராணுவத்தின் அனுபவம். அதுபற்றி ஆராயவே நைஜீரியக் குழு கொழும்பு வந்திருந்தது. இவ்வாறாக தீவிரவாதத்துக்கு எதிரான போரில் நாட்டுக்கு வெளியே இலங்கையும் ஏதோ ஒரு வகையில் தொடர்புபடத் தொடங்கியுள்ளது. இந்தநிலையில் அல்கொய்தாவின் எச்சரிக்கையை கொழும்பினாலும் உதா சீனம் செய்ய முடியாது.


-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அஹிம்சைவழி போராட்டமானது ஆயுதப் போராட்டமாக மாறலாம்

(கொழும்பு)

அரசாங்கத்தை பலவீனப்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேசத்துடன் கைகோர்ப்பது இறுதியில் கூட்டமைப்பிற்கே அழிவைத் தேடித் தரும். வடக்கு , கிழக்கினை இணைத்து தமிழீழத்தினை உருவாக்க இந்தியா துணை போகுமாயின் அதனைத் தடுத்து போராடவும் நாம் தயார் என தெரிவிக்கும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க அஹிம்சை வழிப் போராட்டம் இறுதியில் ஆயுதப் போராட்டமாகவும் மாறலாம் எனவும் தெரிவித்தார்.



தமிழ் மக்களின் அரசியல் தீர்வினை பெற்றுக்கொள்ள அரசாங்கம் முன்வராவிடின் அஹிம்சை வழியில் போராடவும் தயார் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தமை மற்றும் வடக்கு. கிழக்கு இணைந்தே தீர்வு பெறுவோம் என கூட்டமைப்பு தெரிவித்துள்ளமை என்பன தொடர்பில் தொழில்நுட்பவியல் மறறும் அணுசக்தி விவகார அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வெற்றியளித்திருக்குமாயின் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய தமிழ் கட்சிகள் விடுதலைப் புலிகளின் ஆதரவுக் கட்சிகளாக செயற்பட்டிருப்பார்கள். இன்றும் இவர்கள் சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகளை ஆதரித்து அவர்களை நியாயப்படுத்துகின்றனரே தவிர தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை கவனத்திற் கொள்ளவில்லை.

சர்வதேசத்துடன் உறவினை மேற்கொண்டு அதன் மூலம் இந்த அரசாங்கத்தினை பலவீனப்படுத்த முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நினைக்குமாயின் இறுதியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே அழிவினை எதிர்கொள்ளும். இந்தியாவோ ஐ.நா. அமைப்போ தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் பேச்சைக் கேட்கவில்லை. தமது தேவையினை நிறைவு செய்ய இப்போது கூட்டமைப்பினை பயன்படுத்திக் கொள்கின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமாயின் இறுதியில் அரசாங்கத்திடமே வந்தாக வேண்டும். இதனை தமிழ் தரப்பினர் தெளிவாக விளங்கிக் கொளள வேண்டும்.

மேலும், வடக்கு. கிழக்கினை இணைத்து தனித் தமிழீழத்தினை உருவாக்குவது தான் கூட்டமைப்பின் நோக்கமென்பதை நாம் ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்டியுள்ளோம். இவர்களின் செயற்பாடுகள் ஒன்றும் புதிய விடயமல்ல.

அஹிம்சை போராட்டம் அல்ல

இலங்கைக்குள் இனப் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படுமாயின் அதை தேசிய அளவிலேயே கையாள வேண்டும். எனினும் இன்று தமிழ் தரப்பினரே சர்வதேச ஆதரவினை நாடியுள்ளனர். அதே போல் அரசாங்கத்தின் எவ்வித கோட்பாட்டிற்கும் இணங்காது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமெனப் போராடுவதும் ஒரு போதும் சாத்தியமாவதில்லை.

இன்று அஹிம்சை வழியில் போராடுவோம் என மாவை சேனாதிராஜா தெரிவித்தாலும் இது அஹிம்சை வழிப் போராட்டமாக அமையாது. இவர்களின் ஆயுதப் போராட்டக் கொள்கை இன்னும் மனதளவில் உள்ளது. எனவே எந்த வகையிலும் போராடுவது தமிழீழத்தினை பெற்றுத் தரப் போவதில்லை.

மேலும். வடமாகாண முதல்வர் மற்றும் சம்பந்தன் மாவை போன்றோர் பிரிவினைவாதக் கொள்கையின் கீழ் செயற்படுவோர். எனவே, இச்செயற்பாடுகள் அரசாங்கத்திற்கு முரணானவையே. எனவே, நாட்டிற்கும் அரசாங்கத்திற்கும் முரணான செயற்பாடுகள் எதனையும் யாரும் செய்ய அனுமதிக்கக் கூடாது. அதேபோல் வடமாகாண முதல்வர் சர்வதேச விஜயத்தினை மேற்கொள்வதாகவும் அரசாங்கத்தின் அனுமதி இருக்க வேண்டும். இதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை எனவும் அவர் தெரிவித்தார். (இ)

# மாணவியை வல்லுறவுக்குட்படுத்திய இளைஞன் பொலிஸாரால் கைது!

(கொழும்பு)

மாணவியொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய 20 வயது இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பாலமுனை 1 ஆம் பிரிவை சேர்ந்த மாணவி கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வீட்டில் இருந்து மேலதிக வகுப்பிற்காக சென்றவர் அன்றிரவு வீடு திரும்பாததால் மாணவியின் தாய் மறுநாள் சனிக்கிழமை அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

வீட்டில் இருந்து மேலதிக வகுப்பிற்கு சென்ற சிறுமியை அதே பிரதேசத்தை சேர்ந்த 20 வயது இளைஞன் அழைத்து சென்று அட்டாளைச்சேனை பிரதேசத்தில் உள்ள இளைஞனின் உறவினர் ஒருவரின் வீட்டில் வெள்ளிக்கிழமை இரவு தங்க வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.

பெற்றோர் மாணவியை தேடிக் கொண்டிருக்கும் போது அவரிடமிருந்து கைத்தொலைபேசி அழைப்பு ஒன்று, நான் அட்டாளைச்சேனை வீடொன்றில் இருக்கிறேன் என வந்துள்ளது. இதனையடுத்து பொலிஸாரினால் இருவரும்கைது செய்யப்பட்டனர்.

சிறுமி வைத்திய பரிசோதனைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். (இ)

# வெடிகுண்டு மிரட்டல்; இலங்கை அகதி கைது

இந்தியாவின் தமிழகத்திலுள்ள தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததாக இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தூத்துக்குடி பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.50 மணிக்கு வந்த தொலைபேசி அழைப்பில் பேசிய நபர், தூத்துக்குடி துறைமுகத்தில் வெடிகுண்டு வெடிக்கும் எனக்கூறிவிட்டு இணைப்பைத் துண்டித்தார். சோதனையில் அது வெறும் புரளி எனத் தெரியவந்ததையடுத்து. மிரட்டல் விடுத்த நபரை பொலிஸார் தேடி வந்தனர். இந்நிலையில், விளாத்திகுளம அருகேயுள்ள தாப்பாத்தி இலங்கைத் தமிழர்கள் அகதிகள் முகாமைச் சேர்ந்த விஜய பிரபாகரன் (வயது 26) என்பரே மிரட்டல் விடுத்தவர் என்பது தெரிய வந்தது. (இ)

# இலங்கைப் பெண் அகதி தீக்குளித்து உயிரிழப்பு!

(கொழும்பு)

இலங்கைப் பெண் அகதி ஒருவர் தமிழகத்தில் தீக்குளித்து உயிரிழந்துள்ளார்.

தமிழ்நாடு திருவண்ணாமலை ஒசூர் வந்தவாசி அகதி முகாமில் தங்கியிருந்த பெண் ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

30 வயதான பரமேஸ்வரி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண் திருமணம் முடித்து விவாகரத்தானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து பெண் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# இன்று ஒரு தகவல்

## அந்த எட்டுப்பேர்

ஒரு பள்ளிக்கூடத்தில் வசதியான வீட்டுப்பிள்ளையும் ஏழைப் பையனும் படித்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்களிருவரின் வீடுகளும் ஒரே தெருவில் தான் இருந்தன. பணக்கார வீட்டுப்பையன் பங்களாவில் இருந்தான்.

அவனுக்கு வேலைசெய்வதற்காக சில வேலையாட்கள் உண்டு. அதனால் அவன் நன்றாக சாப்பிடுவான். தூங்குவான். ஏதோ வரவேண்டுமே என்பதற்காக பள்ளிக் கூடத்துக்கு வருவான் போவான் அவ்வளவுதான். இந்த ஏழைப்பையன் அப்படியில்லை. காலையில் எழுந்து உடற்பயிற்சிசெய்வான். அவர்களுடைய வீட்டில்கிடைக்கும்சாதாரணஉணவை அளவோடு உண்பான். வீட்டிலுள்ள வேலைகளையும் செய்வான்.

பள்ளிக்குத் தவறாமல் வந்துவிடுவான்.

அவனுக்கு கூடப்பிறந்த சகோதரிகள் எட்டுப் பேர் உள்ளனர்.

எல்லோரும் தன்னம்பிக்கையுடன் அவரவர் வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர்.

இந்தப்பையன் எப்பொழுதும் உண்மையைத்தான் பேசுவேன்.

கடமையை ஒழுங்காகச் செய்வான்.

ஆசிரியர்களுக்கு இவனை நன்றாகப் பிடிக்கும். அதனால் இவனை அந்தப் பள்ளிக்கூடத்து மாணவத்தலைவனாக நியமித்திருந்தனர்.

இது அந்த பெரிய இடத்துப்பையனுக்குப் பிடிக்கவில்லை.

மாணவத்தலைவனுக்குப் பணிந்து போகவும் அவனுக்கு விருப்பமில்லை.

ஒருநாள் வகுப்பில் ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் ஒரு வேலை கொடுத்தார்.

எல்லோரும் அதை சுறுசுறுப்பாக செய்து கொண்டிருந்தனர். இவன் மட்டும் சோம்பலாக உட்கார்ந்திருந்தான்.

ஆசிரியர் அந்தப் பக்கமாக வந்தார். இதைப்பார்த்து விட்டார். உடனே மாணவத்தலைவனாக இருக்கும் அந்த ஏழைப்பையனைக் கூப்பிட்டார்.

"அந்தப்பையன் ஏன் இப்படி சும்மா உட்கார்ந்திருக்கின்றான்? என்னவென்று விசாரித்துச் சொல்" என்று சொல்லிவிட்டு உள்ளே போனார். இவன் மெதுவாகப்போய் அவனிடம் விசாரித்தான். "ஏன் இப்படி சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறாய்? " என்று கேட்டான்.

அவன் அலட்சியமாக இவனைப் பார்த்தான்.

"என்னுடைய சிரமம் உனக்கெங்கே தெரியப் போகிறது? வீட்டில் என்னுடைய சௌகரியங்களைக் கவனிக்கும் வேலையாட்கள் இரண்டுபேரும் இன்றைக்கு வேலைக்கு வரவில்லை.

அதனால் என்னுடைய வேலைகளையெல்லாம் நானே கவனிக்க வேண்டியதாயிற்று. அதனால் சோர்ந்து போய்விட்டேன்" என்றான்.

அதன்பின் கேட்டான்:

"அதுசரி உன்னுடைய வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் வராதபோது நீ எப்படிச் சமாளிக்கிறாய்?" என்று கிண்டலாகக் கேட்டான்.

இவன் ஏழை என்பதையும் இவனுடைய வீட்டில் வேலை செய்வதற்கு யாருமில்லை என்பதையும் இப்படிச் சொல்லி கிண்டல் செய்தான். இது இந்த ஏழைப்பையனுக்கும் புரிந்தது. மனம் வேதனைப்பட்டது. இருந்தாலும் வெளியில் எதுவும் காட்டிக்கொள்ளாமல் சிரித்துக் கொண்டே, "எனக்கு அந்தக் கவலையே கிடையாது. நான் நினைத்தவுடன் எனக்கு உதவி செய்ய எட்டுப்பேர் எப்பொழுதும் தயாராக இருக்கிறார்கள்" என்றான்.

இவன் இப்படிச் சொன்னதும் அவனுக்கு ஒரு மாதிரியாகி விட்டது. தலையைக் குனிந்து கொண்டு போய்விட்டான். உள்ளே உட்கார்ந்திருந்த ஆசிரியரின் காதில் இது விழுந்தது.உடனே அந்த ஏழைப்பையனை உள்ளே கூப்பிட்டார். போனான். இவன் பொய் சொல்லமாட்டான் என்று அவருக்குத் தெரியும். அவனை சமாளிப்பதற்கு இவன் இப்படியொரு பொய் சொல்லியிருப்பான் என்பதையும் அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"என்னப்பா... நீ நினைக்கும் காரியத்தை செய்ய 8 பேர் தயாராக இருப்பதாக சொன்னாயே உன்னுடைய சகோதர, சகோதரிகளை சொன்னாயா?" என்று கேட்டார்.

"இல்லை ஐயா, நான் அவர்களைக் குறிப்பிட்டு அப்படிச் சொல்லவில்லை " என்றான்.

"அப்படியானால் பொய் சென்னாயா?" என்று கேட்டார். "ஐயா நான் பொய்யும் சொல்லவில்லை" என்றான். "அப்படியானால் நீ சொன்னதற்கு என்ன அர்த்தம்" என்றார்.

அதற்கு அந்தப்பையன் சொன்னான்:

"ஐயா நான் நினைப்பதை செய்து முடிக்க என்னிடமுள்ள அந்த எட்டுப்பேர் யார் எனில் இரண்டுகால்கள், இரண்டகைகள், வாய், மூக்கு, கண், காது இவர்கள்தான் அந்த வேலையாட்கள்.

நான் சொல்வதை கேட்க அவர்கள் எப்பொழுதும் தயார். அந்த அளவுக்கு என்னுடைய பயிற்சிகள், பழக்கவழக்கங்கள் மூலமாக அவர்களை நல்ல நிலைமையில் வைத்திருக்கிறேன்" என்றான்.

இந்தக்கதையை சுவாமி சின்மயானந்தர் சொல்லுவது வழக்கம். இயற்கை நமக்கு கொடுத்திருக்கும் வேலையாட்கள் தான் இந்த எட்டுப்பேரும்.

இவைகளை நல்ல முறையில் வைத்திருந்து வேலைவாங்க வேண்டியது நமது கடமை. அந்தக்கடமையை ஒழுங்காக செய்து கொண்டு வந்தால் வாழ்க்கையில் வெற்றி நிச்சயம். இல்லையெனில் குழப்பம் தான்.

புத்திசரியாக இல்லையெனில் இந்த வேலையாட்கள் நாம் சொல்வதை கேட்கமாட்டார்கள். ஒருத்தன் மதுபோதையில் தள்ளாடித்தள்ளாடிப்போய் ஒரு மரத்தில் முட்டிக் கொண்டான். தலையில் கட்டுப் போட்டுக் கொண்டு மறுநாள் வந்தான். "ஏன்டா இப்படிச் செய்கிறாய்" என்று கேட்டார்கள்.

"நான் ஒதுங்கிப்போ என்றுதான் சொன்னேன் அது கேட்கவில்லை" என்றான்.

"எது கேட்கவில்லை? உன்னுடைய காலா" என்று கேட்டார்கள்.

"இல்லை... அந்த மரம்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வாழ்வாதார உதவிகளினை பெற்று உச்சப்பயன்பெற வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு


(கிளிநொச்சி)

நாம் பல்வேறு வேலைத்திட்டங் களுக்கு ஊடாக மக்களுக்கு வாழ் வாதார உதவிகளை வழங்கி வரு கின்றோம். கிடைக்கின்ற வாழ் வாதார உதவிகளை மக்கள் பெற்று உரிய முறையில் பயன்படுத்தி அதிலிருந்து உச்சப்பயனை பெற் றுக்கொள்ள வேண்டுமென பாரா ளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளை பிர தேசத்தில் வறுமையை ஒழிப்போம் வாழ்க்கையை மேம்படுத்துவோம் எனும் கருப்பொருளில் பொருளா தார அபிவிருத்தி அமைச்சின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளி களுக்கு அண்மையில் வாழ்வா தார உத்விகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு கரு த்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரி விக்கையில்.

வறுமையை ஒழித்து வளமான தேசத்தை உருவாக்கும் நோக்கில் அரசு பல்வேறு திட்டங்களை நடை முறைப்படுத்தி வருகிறது. இந்த திட்டங்கள் வெற்றிபெற மக்கள் தங்களின் கடின உழைப்பை மேற் கொள்ள வேண்டும்.



உழைப்பே ஒரு மனிதனை உயர்வுக்கு கொண்டு செல்லும். எனவே கிடைக்கின்ற வாழ்வாதார உதவிகளை மக்கள் உரிய முறை யில் பயன்படுத்தி அதிலிருந்து உச்சப் பயனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சி னால் ஒதுக்கப்பட்ட நூறு மில்லியன் ரூபாவில் 60 சதவீதமானவற்றை மக்களின் வாழ்வாதாரத்திற்கே பயன்படுத்தவுள்ளோம்.

எனவே இந்தச் சந்தர்ப்பங்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டியது மக்களின் பொறுப்பு.

கண்டாவளை பிரதேசத்தில் வாழ்வாதாரத்திற்கு ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சிறு வியாபாரம், உள்ளிட்ட வகையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான உதவிகள் வழங் கப்படவுள்ளது.

அதில் ஆரம்ப நிகழ்வாக 36 பயனாளிகளில் தலா ஒரு பயனா ளிக்கு 30 ஊர்க்கோழி மற்றும் அதற்குரிய கூடு என்பன வழங்கப் பட்டுள்ளது.

இவ்வாறு தொடர்ச்சியாக கிளி நொச்சியின் எல்லா பிரதேச செயலக பிரிவுகளிலும் உரிய உதவிகள் வழ ங்கப்பட இருக்கிறது என்றார். (2)

# பாடசாலைகளில் கணனிகள் இருந்தும் மாணவர்கள் பயன்படுத்த முடியாத நிலை

## கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமையே காரணம் - பெற்றோர் சுட்டிக்காட்டு

(பூநகரி)

பூநகரி நகர்ப்பகுதியில் இருந்து இரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஞானிமடம், சித்தங்குறிச்சி, கறுக் காய்த்தீவு ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கப்படுகின் றது.

பூநகரிப் பிரதேசத்திற்கு மின்சா ரம் வழங்கப்பட்டு இரு வருடங்கள் கடந்த நிலையிலும் மேற்படி கிரா மங்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக் கிராமங்களில் பூநகரி கறுக் காய்த்தீவு மகா வித்தியாலயமும் பூநகரி ஞானிமடம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் அமைந் துள்ளன.

குறித்த பாடசாலைகளில் கணனி வசதிகள் அமையப்பெற்றிருந்தும் மின்சாரம் இன்மையால் கணனியை இயக்கமுடியாதநிலை காணப்படுவ தாக பாடசாலை சமூகம் கவலை கொள்கிறது.

இதனால் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் ஏனைய பிரதேச பாட சாலைகளைப் போன்று கணனி அறிவைபெற முடியாதவர்களாக இருப்பதையிட்டு கவலை கொள்கி ன்றனர்.

இக் கிராமங்களுக்குச் செல்லும் நாகதேவன் துறைவீதியில் ஒரு கிலோ மீற்றர்வரை மின்கம்பங்கள் நடப் பட்டு மின்சார இணைப்பும் வழங் கப்பட்டதுடன் தொடர்ந்து வழங்கப் படாமல் நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே மாணவர்கள் கல்வியைத் தொடரவும் மின்சார வேலைகளை நம்பி இருப்போரின் நன்மை கருதி யும் மேற்படி கிராமங்களுக்கு மின் சாரத்தை வழங்குமாறு பாதிக்கப் பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு கோரிக்கை விடுக்கின்ற னர். (2-84)




# முல்லை.பாடகர்களுக்கான குரல் தேர்வும், பரிசளிப்பும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்கின்ற இசை ஆர்வம் மிக் கவர்களை ஊக்கப்படுத்தி அவர் களை இன்னும் வளர்ச்சியடையச் செய்யும் பொருட்டு நேசக்கரம் அமைப்பினரால் குரல் தேர்வும், பரிசளிப்பும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வானது எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற வுள்ளது.

வயது வேறுபாடின்றி இதில் யாவரும் கலந்துகொள்ள முடியும். தேர்வு செய்யப்படுபவர்கள் மாகாண மட்ட போட்டிக்கு அனுப்பப்பட்டு பின் இந்தியாவில் பயிற்சிக்கு அனுப்பப் படுவர்.

குறித்த தேர்வின்போது உடனடி பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

கலந்துகொள்ள விரும்பும் முல்லை மாவட்ட இசை ஆர்வம் மிக்கவர்கள் புதுக்குடியிருப்பு கலா சார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறது.

அல்லது 077 - 58 92 351 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளினை மேற் கொள்ள முடியும். (2)

# கலாசார விழா இம்முறை தட்டுவன்கொட்டியில்

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலகத்தினால் வருடந்தோறும் நடத்தப் பட்டுவரும் பிரதேச கலாசார விழாவும் வளையோசை நூல் வெளியீட்டு நிகழ்வும் இவ்வருடம் கண்டாவளை பிரதேசத்தின் பழைமை வாய்ந்த கிராமங்களில் ஒன்றான தட்டுவன்கொட்டியில் நடத்துவதற்கு தீர் மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-263)

# நாவற்காடு கிராம மக்கள் மின்சாரம் வழங்கக்கோரி முதலமைச்சருக்கு மகஜர்

(முல்லைத்தீவு)

முள்ளியவளை வடக்கு நாவற் காடு கிராம மக்கள் தாம் மீள்குடி யேற்றப்பட்டு நான்கு வருடங்கள் கடந்த நிலையில் இதுவரை மின் சாரம் வழங்கப்படவில்லையென குறிப்பிட்டு தமக்கான மின்சாரத்தை வழங்கியுதவுமாறு கோரி வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வர னிடம் மகஜர் ஒன்றை கையளித் துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிரு த்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் கடந்த 3 ஆம் திகதி கரைதுறைப் பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு வருகைதந்த போதே மேற்படி மகஜர் கையளிக் கப்பட்டது.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டு ள்ள விடயங்கள் வருமாறு,

நாம் மீள்குடியமர்த்தப்பட்டுநான்கு வருடம் பூர்த்தியாகிவிட்ட நிலையில் எமக்கு இன்றுவரைக்கும் மின்சார வசதி ஏற்படுத்தித் தரப்படவில்லை.

நாம் இது தொடர்பில் கடிதங்கள் கொடுத்தும் எதுவிதபயனும் கிடை க்கவில்லை. எமது அயற்கிராமத்தில்



இருந்து 500 மீற்றருக்கு அப்பால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

எமது கிராமம் மிகவும் பின்தங் கியது. காடுகள் அண்மித்ததாக காண ப்படுகின்றது. இதனால் இரவுவேளை களில் பாம்பு மற்றும் காட்டு விலங்கு த்தொல்லைகள் அதிகமாக உள்ளது.

இதனால் இரவு வேளைப்பொழுதை கழிக்க அஞ்சுகின்றோம்.

மின்சாரம் இல்லாத காரணத் தினால் ஏனைய மாணவர்களோடு ஒப்பிடுகையில் கல்வி வளர்ச்சியில் வீழ்ச்சி நிலை காணப்படுகிறது. இவ் வாறு இருந்தும் மாணவர்கள் பல் கலைக் கழகம்வரை செல்கின்றனர்.

எனவே எதிர்வரும் காலங்களி லாவது மின்சாரத்தை வழங்க உத வுங்கள்.

எனவே எமது நிலையை கருத் திற்கொண்டு நல்லதொரு தீர்வினைப் பெற்றுத்தருமாறு கேட்கிறோம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (2-267)



வவுனியா பறண்நட்டகல் கிராமத்தில் அமைந்துள்ள அடைக்கல அன்னையின் திருநாள் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டபோது... (படங்கள் :- குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரை மாய்க்கும் எண்ணமானது உங்களிடம் மேலோங்கியுள்ளதா?

வாழத்துடிக்கின்ற அநேகர் வாழ்க்கைப்போருக்கு முகம் கொடுக்க எந்த ஆயத்தமோ ஆயுதமோ இன்றி தனிமையில் தவிக்கின்றனர். ஒவ்வொரு தனி மனிதனுக்குள்ளும் ஓராயிரம் விடைகாணா வினாக்கள். ஏன் நிம்மதியில்லை? ஏன் எனக்குத் துன்பம்? ஏன் எனக்கு கஷ்டம்? ஏன் என்னால் இதைச் செய்யமுடியவில்லை. எனக்கு எதுவுமே முடியாதா? இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். ஓ மனிதர்களே உங்களைப் படைத்த இறைவன் உங்களுக்குள் படைத்து வைத்த மனம் என்னும் மாய மகா சக்தியை மறந்து விடாதீர்கள்.

எங்களிடம் நாம் நிம்மதியைக் காணாவிட்டால் வேறு இடத்திலோ மற்றவர்களிடமோ அதைப் பெற்றுக் கொள்ளலாம் என முயல்வது மூடத்தனமான காரியம். குறிப்பாக எமது செயற்பாடுகளே உள்ளத்தின் எண்ண அலைகளாக எமது நிம்மதியைப் பறித்து விடுவதும் உண்டு. செய்யவேண்டியவற்றை செய்வதில் தாமதம் மற்றும் எதிலும் சந்தேகம் கொள்வது போன்றவை மன அமைதிக்கு கேடு விளைவிக்கும்.

ஆரம்பத்திலே செய்ய வேண்டியதை முடிவில் செய்வதால் அச்செயல் முழுமையடையாமல் ஆரம்ப நிலையிலேயே இருக்கும் என்பதனை மறக்காதீர்கள்.

முக்கியமாக சந்தேகம் என்பது வாழ்வைத் தீவைத்துக் கொளுத்த மனதிற்கு தெளிக்கும் மண்ணெண்ணெய் போன்றது. மனம் ஒரு குரங்கு. அதனை அலைய விடாதிருங்கள். வாழ்க்கைப் போரினை வெற்றிகொள்ள நிம்மதியே ஒரு பெரிய வலுவான ஆயுதம் ஆகும்.

நடைமுறை வாழ்க்கையில் சிறிதோ பெரிதோ ஒவ்வொரு காரியமும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே ஆரம்பமாகிறது. உன்னால் முடியும் என மனதைப் பலப்படுத்தினால் உன் மனமே அதனைச் செய்து முடித்துவிடும். முடியாது என்ற வார்த்தையை உனது வாழ்க்கையில் இருந்து எடுத்துவிட்டால் உன்னை வெல்ல யாராலும் முடியாது. முடிந்தவரை நாம் நம்மில் நம்பிக்கை வைக்கவேண்டும்.

எமது வாழ்க்கையின் தோல்விக்கு காரணம் எமது மன அமைதியின்மைதான். ஞானம் உள்ள மனிதர்கள் பதற்றப்படமாட்டார்கள். என்னைப் பொறுத்தவரை மனதின் அமைதியான நிலையை ஞானம் எனவும் கூறலாம். நாம் எமது மனதினை அமைதியாக, நிம்மதியாக வைப்பதன் மூலம் பெரும் சாதனை செய்ய முடியும் என்பதனை அறிவோம். இருப்பினும் எம்மால் நிரந்தரமான மன அமைதியை அடைய முடிவதில்லை. அதற்கான வழி எமக்கு தெரிவதில்லை. எமது புலன் அடக்கம் மன அமைதியைத் தரும்.

எமது ஐம்புலன்களை அடக்க நாம் தியானத்தைக் கற்றுக்கொள்ளலாம். தியானத்தின் போது நாம் எல்லாவற்றையும் மறந்து ஒரு புதிய அனுபவம் பெறுவதுடன் தவறுகளை தவிர்க்கும் தெளிவையும் பெறலாம்.

மனிதன் அநேக தவறுகளைத் தெரிந்தே செய்கின்றான். பின்னர் சூழ்நிலை, சந்தர்ப்பம் என காரணம் காட்டி தப்பித்துக்கொள்ள முனைகின்றான். ஆனாலும் அவனது மனச்சாட்சி குற்றவுணர்வை ஏற்படுத்தி இவனது நிம்மதியைக் கெடுத்துவிடும். உலகிற்கு அவன் மகிழ்வாக இருப்பதாகக் காட்டிக் கொண்டாலும் தனிமையில் அவன் மன உளைச்சலால் நிம்மதியின்றி அவஸ்தைப்படுகின்றான். தவறைச் செய்த அவனுக்கு பிராயச்சித்தமாக மன்னிப்புக் கொள்கை துணைபுரிகின்றது. தவறை நம்பத்தகுந்த உறவினரிடமோ நண்பரிடமோ கூறிவிடுதல் மன அமைதி தரும்.

தனது குற்றத்தை உணர்ந்து திருந்தக் கற்றுக்கொண்ட ஒருவன் உண்மையிலேயே திருந்தியவனாவான். அவன் கஷ்டம் அற்ற நிம்மதியான வாழ்வை வாழ்வான்- வாழ முடியும். குற்ற உணர்வும் வாழ்வை முடித்து விடத் தூண்டுகிறது. பல மதக் கருத்துக்களும் மன்னித்தல் பற்றி கூறியிருப்பது நாம் அறிந்ததே.

தமது குற்ற உணர்வைப் போக்க முடியாத சிலர் மரணத்தைத் தேடும் கோழைகளாகி விடுகின்றனர். இதற்குக் காரணம் மனதில் ஏற்படும் விரக்தியே. துணிவுள்ளவன் பிரச்சினைகளை சமாளித்துவாழ்வான். எமது உள்ளத்தின் அமைதியின்மை, வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ள முடியாமை, தோல்விகளை சகிக்க முடியாமை, அர்த்தமில்லாத எதிர்பார்ப்புக்கள் போன்றவை எமக்கு விரக்தியை ஏற்படுத்துவதுடன் வாழ்க்கை வேண்டாம் என தற்கொலை முயற்சிக்கு தூண்டுவதாகவும் இருக்கின்றன.

இந்த வருட (2014) ஆரம்பத்திலேயே யாழ்.பல்கலைக்கழக 3ஆம் வருட கலைப்பிரிவு மாணவியும் பின்னர் கடந்த 03.07.2014 அன்று 3ஆம் வருட புவியியற்றுறை மாணவனும் மன அழுத்தம் காரணமாக தற்கொலை செய்து கொண்டார்கள். இவர்கள் முட்டாள்கள் அல்ல! வாழ்க்கையில் முன்னேற்றம் காண 3 வருடமாய் முயன்று சாதித்தவர்கள். சாதிக்க துணை வந்த துணிவே சாகவும் துணை வந்ததா? உள்ளத்துடன் பேச மறுத்தார்கள். உலகை வெறுத்தார்கள். தம்மை மறந்து தனித்துப்போனார்கள். மரத்துப் போனது அவர்கள் மனம் மட்டுமா? இன்று அவர்களும் அல்லவா மரித்துப் போனார்கள்.

ஆகவே, முன்னேற்றத்தின் தடை விரக்தி என்பதனை மறவாதீர்கள். எல்லாவற்றையும் அன்பு செய்ய கற்றுக்கொள்ளுங்கள். அன்பு உள்ளத்தைக் கட்டும், நடத்தும், புதிய வழிகாட்டும். மனிதன் தினமும் ஒரே வகையான வேலையைச் செய்வதால் அவனுக்கு நிச்சயம் கசப்பு வந்துவிடும். ஒருவிடயத்தில் சோர்வு, சலிப்பு ஏற்படும் போது அதனைத் தவிர்த்துவேறுவிடயங்களில்பொழுதை மகிழ்வாகக் கழிக்க முயற்சி செய்ய வேண்டும். அன்பான நண்பர்கள் அநேகர் மனிதனுக்குத் தேவை. இன்றைய நவீன தொலைக்காட்சித் தொடர்களோ, பூங்காக்களோ, கடற் கரைகளோ, இயற்கையோ எமக்கு அமைதி தரும் நல்ல உறவாகும்.

நாம் வாழ ஒரு வீடு தேவை. எமது வீடு தினம் குப்பைகளால் நிறைகின்றது. தூசுகள் பிடிக்கின்றது. ஏன் உயிர்க்கொல்லி பூச்சிகள் கூட உள்ளே வருகின்றன. அதற்காக வீட்டையே பாழ்பட்டுப் போக விடுகின்றோமா என்ன? தட்டிக் கூட்டிக் கழுவி, வெள்ளை அடித்து உடைந்ததை புதிதாய் கட்டி அழகுபடுத்திக் கொள்வதில்லையா? அது போன்றுதான்.

மலை சாய்ந்தாலும் மனம் சாயா நிலைவேண்டும். பெரிய மலை இடிந்து போனாலும் போகலாம். ஆனால் மனம் ஒரு போதும் இடிந்து போய்விடக்கூடாது. துன்பங்களை, சோர்வுகளை, விரக்தியை, கூட்டிக்கழுவி சுத்தம் செய்து புதிய மனதுடன் என்றும் புதுயுகம் காணப்போராட வேண்டும். எல்லாவற்றையும் சொல்லிவிடுவது சுலபம். வாழ்க்கையில் செய்வதுதான் கடினம். ஒரு விடயத்தை பயிற்சியின்றி செய்கின்றவரை எதுவுமே கடினம்தான். பயிற்சியின் மூலம் சாதித்துவிடலாம். அதனைப்போன்று சுலபமானது ஒன்றுமில்லை. மனம் இருந்தால் எதுவும் ஆகும்.

மனதிற்குப் பிடித்துவிட்டால் வாழ்க்கையும் மனம்போல் அழகாகத்தான் அமைந்துவிடும். வாழ்க்கையை மனமாக வாழுங்கள். மலரும் நாட்களில் உன் மனம் போதுமே உன்னை மகானாக்கி விடுவதற்கு. அறிவினால் எட்டாத அரும்பெரிய சாதனையை உன் அகம் செய்யும் அறிந்துகொள்.

**இமயத்தின் உச்சியில் இருக்கிறாய் மனிதா!**

**பனிக்கட்டியின் குளிரினைப் பார்க்கவாவது ஆசைப்படு**

**மனம் உண்டானால் இடம் உண்டு.**

ச.பிரம்மியா
3 ஆம் வருடம் உளவியல் சிறப்புக்கலை மாணவி,
மெய்யியல் -உளவியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## விதிமுறைகளை மீறிய 40 பேர் கைதாகினர்

ஊவா மாகாணசபைத் தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் இதுவரை 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 54 முறைபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

அதிகமான முறைபாடுகள் மொனராகலை மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## இலங்கைக்கு ஹெரோயின் கடத்தி வந்தவர் கைதானார்

(கொழும்பு)

டுபாயில் இருந்து ஹெரோயினுடன் இலங்கைக்கு வந்த சந்தேகநபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு பைக்கற் ஹெரோயின் இவரிடம் இருந்ததாக சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

தெமட்டகொட பகுதியைச் சேர்ந்த 38 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தான் சில காலம் சிறையில் இருந்ததாகவும் அதன்போது பழக்கப்பட்ட பாகிஸ்தான் பிரஜையுடன் இணைந்து வர்த்தக நோக்கமாக டுபாய் சென்றதாகவும் சந்தேகநபர் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் சுங்கப் பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (இ)



தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட தேசிய உற்பத்தி திறன் விருதுக்கான போட்டியில் அரச திணைக்களங்களுக்கான பிரிவில் மூன்றாம் இடத்தை பிடித்த யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கான விருதை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகுதாவூத்தி[illegible] பெற்றுக் [illegible]. இந்நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.இரவீந்திரனும் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் சிறுகதைப் பட்டறை தொடர்பான ஒன்றுகூடல் இணுவில் மத்திய கல்லூரியில் ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ)

## பிரிவுத்துயர் பகிர்வு



### சுப்பிரமணியம் விஜயபாலன்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Heilbronn ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விஜயபாலன் கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை St.-Georgs-Weg, 74831, Gundelsheim am Neckar, Germany என்னும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.

### தர்மலிங்கம் சிவாசெல்லையா



கரவெட்டி வதிரியைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough, Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சிவாசெல்லையா கடந்த 6 ஆம் திகதி சனிக்கிழமை அன்று அகால மரணமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada, என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி துரைராசசிங்கம் செல்வபாக்கியம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசசிங்கம் செல்வபாக்கியம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# இலவச கண் பரிசோதனை சண்டிலிப்பாயில் 19ம் திகதி


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் 55 வயதுக்கும் மேற்பட்ட முதியவர்களுக்கு இலவச கண் பரிசோதனை மேற்கொள்ளப் படவுள்ளதுடன், மூக்குக்கண்ணாடிகளும் வழங்கும் நடவடிக்கை வலி.தென்மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக சண்டிலிப் பாய் சுகாதார வைத்திய அதிகாரி கே.ரஜீவ் தெரிவித்தார்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசர ணையுடன் நடைபெறவுள்ள இந்த இலவச மருத்துவ முகாமில், வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள 150 முதியவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், கண் சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை ஏற்படுபவர்களுக்கு வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்வத ற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். இதேவேளை, கண் வில்லைகளும் இலவசமாக வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த இலவச மருத்துவ முகாமில் கல ந்து கொள்ள விரும்புகின்றவர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்பாக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யின் பொதுச்சுகாதார பரிசோதகருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படு கின்றனர். (இ)


நன்றி-மிரர்

# ஜெரோமி கொன்சலிற்றாவின் வழக்கு நவம்பர் 11 ஆம் திகதிவரை ஒத்திவைப்பு

யாழ்.குருநகர் யுவதி ஜெரோமி கொன்சலிற்றா சடலமாக மீட்கப் பட்ட சம்பவம் தொடர்பாக யாழ். நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற் றுவரும் வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் நடைபெற்று 4 மாதங்கள் கடந்து விட்ட நிலை யிலும் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடைபெறுவதற்கு மேலும் கால அவகாசம் தேவை என பொலிஸார் நீதிமன்றத்தில் கோரியதை அடுத்தே குறித்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி காணாமற் போயிருந்த குருநகர் பகுதியினைச் சேர்ந்த ஜெரோமி கொன்சலிற்றா மறுநாள் மாலை யாழ்.பெரிய கோவிலடியில் உள்ள கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டிருந்த பொலிஸார் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கு விசாரணைகளின் போது மன்றில் யாழ்.போதனா வைத்திய சாலையின் சட்டவைத்திய அதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கையின்படி சடலமாக மீட்கப்பட்ட ஜெரோமி கொன்சலிற்றா நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

குறித்த வழக்கில் மேலும் ஏதும் சந்தேகம் இருப்பினும், குறிப்பாக உயி ரிழந்த யுவதி பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டிருந்தார் என்பது சம்ப ந்தமாக முழுமையான விசாரணை மேற்கொண்டு மன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றுக் காலை யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பொலிஸார் தமது விசாரணை முடியவில்லை என்றும் விசாரணையை முடிவுக்குக் கொண்டுவர மேலும் கால அவகாசம் தேவை எனவும் கோரியிருந்தனர். இதன்படி மேலும் பொலிஸாருடைய விசார ணைக்காக ஒரு மாத கால அவகாசத்தினை நீதிமன்றம் வழங்கி, குறித்த வழக்கினை எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி செவ்வாய்க கிழமைவரைக்கும் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது . (இ)

# கல்வியுடன் சுகாதாரம் இணைந்தால் வளமான எதிர்காலமானது உருவாகும்

(யாழ்ப்பாணம்)

கல்வித்துறையும் சுகாதாரத்து றையும் இணைந்து செயற்பட்டால், வளமான எதிர்கால சந்ததியை உருவாக்க முடியும் என சண்டி லிப்பாய் சுகாதார வைத்திய அதி காரி கே.ரஜீவ் தெரிவித்தார்.

யாழ்.சண்டிலிப்பாய் பகுதியில் மேற்கொள்ளப்படும் சுகாதார நடை முறைகள் தொடர்பில் அவர் மேலும தெரிவிக்கையில்,

சுகாதாரத்துறையை சேர்ந்த வர்கள் பாடசாலைகளுக்கு வரும் போது மாணவர்களுடன் கலந்து ரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை பாடசாலை நிர்வாகம் வழங்க வேண்டும். இதனால், மாணவர் கள் மத்தியில் சுகாதாரம் சம்பந்த மான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

நாட்டில் இளவயதுக் கர்ப்பம், சிறுவர் துஷபிரயோகம், சட்ட விரோத கருக்கலைப்பு என்பன நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கினறன. இதனால், பாதிக்கப் படுபவர்கள் பெரு ம்பாலும் பாடசாலை மாணவர்களாக இருக்கின்றனர். இது தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்து வதன் மூலம் இவற்றைக் கட்டுப் படுத்த முடியும்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத் திய அதிகாரி பிரிவில் சுகாதாரக் கழகங்களை உருவாக்கி சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது தொடர்பிலும் பருவமழை ஆரம்ப மாகவுள்ள நிலையில், டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ள மையால் அதைக் கட்டுப்படுத்துவத ற்கான நடவடிக்கைகளும் முன்னெ டுக்கப்படுகின்றன என அவர் மேலும தெரிவித்தார். (இ)

# சுகாதாரமற்ற உணவகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில், சுகாதாரமற்ற முறையில் இயங்கி வந்த 14 உண வகங்கள் மற்றும் 2 வெதுப்பகங் கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கோப பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்தனர்.

சுகாதார வைத்தியதிகாரி பணி மனையின், மேற்பார்வையின் கீழ், சுகாதார பரிசோதகர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் இணை ந்து கடந்த வாரம் நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையிலேயே இந்த உணவகங்களும், வெதுப் பகங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த உணவகங்களில், உடல நலத்துக்கு ஒவ்வாத முறையில் உணவு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதிக நாட்களுக்கு உணவு பொருட் களை குளிரூட்டியில் களஞ்சியப் படுத்தி வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மேலங்கி அணியா மல் வெதுப்பக உணவுகள் தயாரித் தமை மற்றும் பணியாற்றுபவர் களுக்கு மருத்துவ சான்றிதழ்கள் இல்லாமை போன்ற குற்றங்க ளுக்காக 2 வெதுப்பகங்களும் பிடிக்கப்பட்டன.

உணவகங்கள், வெதுப்பகங்க ளின் உரிமையாளர்களுக்கு எதி ராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்குகள் எதிர்வரும் 17 மற்றும் 28 ஆகிய தினங்களில் முறையே மல்லாகம் நீதவான் நீதிமன்றம், யாழ்ப்பாண நீத வான் நீதிமன்றம் ஆகியவற்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள் ளப்படவுள்ளதாக பணிமனையி னர் மேலும் தெரிவித்தார். (இ)

# கடத்தப்படும் நெடுந்தீவு குதிரைகளை மீட்க பயணமாகும் வடக்கு மாகாண சபையினர்



(யாழ்ப்பாணம்)

கடற்படையால் கடத்தப்படும் நெடுந்தீவு குதிரைகளை மீட்கும் நோக்கில் நாளை 11 ஆம் திகதி நெடுந்தீவுக்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் மற்றும் மாகா ணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினர் பயணம் மேற்கொள்ள வுள்ளனர் என அறிவிக்கப்பட்டு ள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகா ணசபை ஆளும் கட்சி உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 1833 ஆம் ஆண்டுக்கு முன்பு நெடுந்தீவில் இயங்கிய கச்சேரி - அலுவலர்களை நியமி த்து அங்குள்ள குதிரைகளை பார ்த்து பராமரித்து வந்தது. 1833 ஆம் ஆண்டு அங்கு பிரதேச செயலகம் மூடப்பட்ட பின்பு அங்குள்ள குதி ரைகள் அநாதரவாக தரவைக ளிலும் காடுகளிலும் வாழ்ந்து வருகின்றன.

சப்த தீவுகளில் பெரும் தீவான நெடுந்தீவுக்கு பெருமை சேர்க்கும் அடையாளச் சின்னமாகவும், இலங் கையின் முக்கியமான மரபுரிமை சொத்துகளாகவும் வரலாற்று அடை யாளங்களாகவும் சுற்றுலா பயணி களை கவருவனவாகவும் இருக் கும் இக்குதிரைகளை பார்வையிட அண்மையில் நெடுந்தீவுக்குச் சென்ற இலங்கை வனவள ஜீவரா சிகள், திணைக்கள அதிகாரிகள், நெடுந்தீவிலுள்ள குதிரைகளை பார்வையிட்டதோடு குதிரைகள் நீர ருந்துவதற்கு வசதியாக குடிநீர்த் தொட்டிகளையும் அமைத்து குதி ரைகள் மேய்வதற்கு குயின் ரவ ரினை அண்டிய காட்டுப்பிரதேசத் தில் நல்லின புற்களையும் உண் டாக்கப்போவதாகவும் அறிவித்த னர். இவை நல்ல விடயங்கள் தான்.

ஆனால் அண்மையில் மீண் டும் நெடுந்தீவு சென்ற வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகா ரிகள் அங்குள்ள குதிரைகளின் இரத்த மாதிரியை பரிசோதித்த போது இவை நல்லின குதிரைகள் என நிரூபனமாகியன.

இந்நிலையில் கடந்த சில நாட்க ளுக்கு முன்பு கடற்படையினர் தங்களின் சீ-காட் படகுகள் மூலம் இரு கட்டங்களாக ஆறு குதிரை களை ஏற்றிக்கொண்டு வந்து யாழ் ப்பாணத்திலுள்ள இராணுவ சுற் றுலா விடுதிகளில் விட்டுள்ளனர்.

கடற்படையின் இச்செயலால் கொதித்தெழுந்த நெடுந்தீவு மக்கள் இது விடயமாக என்னிடம் கடும் ஆட்சேபனையை தெரிவித்து முறை யிட்டுள்ளனர்.

இந்நிலையில் வடக்கு மாகாண விவசாய நீர்ப்பாசன சுற்றுச்சூழல் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டு வந்து ள்ள நிலையில் கடற்படையின் இத்தகைய செயற்பாடுகளை அனு மதிக்க முடியாது என அவரும் தெரிவித்துள்ளார்.

எனவே நெடுந்தீவிலிருந்து அனு மதி பெற்றோ அல்லது பெறாமலோ கொண்டு சென்ற குதிரைகளை அங்கேயே மீண்டும் கொண்டு சென்று விட வேண்டும் என கோரு கின்றேன். அத்தோடு நாளை 11 ஆம் திகதி விவசாய அமைச்சரும் நானும் குதிரை கடத்தல் தொட ர்பாக ஆராய்வதற்கும் இனிமேல் அங்கிருந்து குதிரைகளை கடத்த முற்படுவதை தடுப்பதற்கான ஏற்பா ட்டை மேற்கொள்வதற்காகவும் நெடுந்தீவு செல்லவுள்ளோம் என அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)




# சிகிச்சை அட்டையை பறித்த நபர் கைது

பெண்ணொருவர் வைத்திரு ந்த நோய் சிகிச்சை அட்டையை பறி த்து சென்ற 24 வயதுடைய சந்தே கநபர் ஒருவரை செல்வச் சந்நிதி ஆலயத்தில் வைத்து நேற்று முன் தினம் திங்கட்கிழமை கைது செய்ததாக வல்வெட்டித்துறை பொலி ஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக பொலிஸார் மேலும் கூறுகையில்,

தென்பகுதி நெளுங்கமுவ என்ற பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொ ருவர், தனது மகனுக்கு இருதய சத்திரசிகிச்சை செய்வதற்காக செல்வச்சந்நிதி ஆலயத்தில், நோயா ளர் சிகிச்சை அட்டையை காண் பித்து பணம் சேகரித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை பெணணின் கையில் இருந்த நோயா ளர் சிகிச்சை அட்டையை இளை ஞர் ஒருவர் பறித்துக்கொண்டு ஓடியுள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைக் காண்பது கடினமல்ல ; அதைக் கண்டதும் கைவிட்டுவிட்டு ஓடாமலிருப்பதுதான் கடினம். – ஏட்ரியன் சில்ஸன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இலங்கை அரசியல்வாதிகள் காந்தியத்தைக் கற்கவேண்டும்

1947 ஆம் ஆண்டு இந்தியத் தேசத்திற்கு சுதந்திரம் கிடைத்தது. முதலாவது சுதந்திரதினத்தை பாரதம் கொண்டாடி தேசியக் கொடி ஏற்றப்பட்ட போது அந்த இடத்தில், பாரத பூமிக்கு விடுதலை பெற்றுக்கொடுத்த மகாத்மா காந்தி இருக்கவில்லை.

அங்கு கூடியிருந்தவர்கள் அதிசயித்து போகின்றனர். அண்ணல் மகாத்மா காந்தி எங்கே? என்ற கேள்வி எழுகின்றது.

இந்தியாவின் எங்கோவொரு மூலையில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. அதைத் தடுத்து நிறுத்துவதற்காக அந்த இடத்திற்குக் காந்தி சென்று விட்டார் என்ற தகவல் கிடைக்கிறது.

பாரத பூமிக்கு விடுதலை கிடைத்து அந்த விடுதலையை பாரத பூமி கொண்டாடிக் கொண்டிருக்கையில் தேசபிதா இல்லாமல் இருப்பது நியாயமா? என்ற கேள்வி எழுந்த போது, அதற்குக் காந்தியடிகள் பதிலளிக்கிறார்.

‘எங்கள் பாரத பூமியில் என்றும் ஒற்றுமை நிலவ வேண்டும். ஒரு பகுதியில் பாரத மக்கள் அடிப்பட்டுக் கொண்டிருக்க, தேசியக்கொடி ஏற்றப்படும் இடத்தில் நான் பிரசன்னமாக இருப்பது பொருத்தமாகத் தெரியவில்லை. ஆகையால் எங்கு முரண்பாடு ஏற்பட்டதோ! அந்த முரண்பாட்டை நீக்குவதே என் முதற்பணி என்று கருதுகிறேன்’ என்றார்.

மகாத்மா காந்தியின் இந்த மன நிலையை இலங்கையின் அனைத்து அரசியல்வாதிகளும் அறிந்திருக்க வேண்டும்.

இலங்கையில் இனப் போர் நடந்து கொண்டிருக்கையில் சுதந்திரதினம் கொண்டாடப்படுகிறது. ஒரு இனம் உறவுகளை இழந்து கதறும் போது இன்னொரு இனம் வெடிகொளுத்தி வெற்றி கொண்டாடுகின்றது.

நிலைமை இதுவாயின் இலங்கையில் இன ஒற்றுமை, அமைதி, சாந்தி என்பன எங்ஙனம் நிலைபெற முடியும்? என்பதை ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை இங்கு இருக்கக் கூடிய ஒவ்வொரு அரசியல்வாதிகளும் ஏதோ ஒரு வகையில் இன ஒற்றுமையை குழப்புவதில் நாளாந்தம் பங்காற்றுகின்றனர்.

மக்களை இன, மத அடிப்படையில் பிரிதெடுத்து அவர்களை உசுப்பேத்தி இந்த நாட்டில் எந்தக் காலத்திலும் ஒற்றுமை ஏற்படக் கூடாது என்பதை மிக நுட்பமாகச் செய்து வருகின்றனர்.

ஒரு சில அரசியல்வாதிகள் இன ஒற்றுமைக்காக குரல் கொடுக்கின்றனராயினும் அவர்களில் சிலர் நாளுக்கு நாள், முரண்பாடான கருத்துக்களை முன்வைக்கின்றனர். இவர்களில் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

இவர்கள் இன்று ஒரு கதை. நாளை இன்னொரு கதை என்றவாறு தங்களையும் குழப்பி மக்களையும் குழப்புகின்றனர்.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண போன்ற அரசியல்வாதிகள் நடுநிலையோடு உண்மைகளை எடுத்துரைக்கின்றனராயினும் அவர்களை வரவேற்று அரசியல் அந்தஸ்தை வழங்க தமிழ்த்தரப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தயாராக இல்லை.

இதன் காரணமாக பெரும்பான்மையைச் சேர்ந்த புத்திஜீவிகளின் தரமான கருத்தைப் பதிவு செய்ய முடியாமல் போகிறது.

ஆக, இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பான்மை இனத்தில் மட்டுமன்றி, உரிமையை வென்றெடுக்க வேண்டிய தமிழ் இனத்திலும் பதவி ஆசையும் அரசியல் குழப்பங்களும் நிறையவே உள்ளன.

தமிழ் இனத்தின் உரிமை, நலன் என்பதை மட்டும் கருதியிருந்தால் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண போன்ற நேர்மையான சிங்கள அரசியல்வாதிகளை நல்ல வளமாகப் பயன்படுத்தி, தென்பகுதி மக்களிடையே தமிழ் இனத்தின் உண்மை நிலையை எடுத்துரைக்கும் பிரசார வியூகம் அமைக்கப்பட்டிருக்கும். எனினும் அது பற்றி நாம் இம்மியும் சிந்திக்கவில்லை.

இப்போது மீளவும் மகாத்மா காந்தியை ஒரு கணம் நினையுங்கள். இலங்கையில் எந்த மூலையிலாவது இப்படியொரு அரசியல்வாதியிருந்தால் ... இலங்கையும் பாரதம் போல ஒற்றுமையாக இருக்கும் அல்லவா!

# ஊவா தேர்தல் சட்ட மீறல்களை கண்டு கொள்ளாத பொலிஸார்

## தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் அதிருப்தி

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 296 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக கபே எனப்படும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் தேர்தல் காலங்களில் சட்டங்களை பாதுகாப்பது போலன்றி, தேர்தல் சட்டங்களை மீறுகின்ற சம்பவங்கள் அதிகம் பதிவாகியுள்ள மாவட்டமாக மொனராகலை மாவட்டம் காணப்படுவதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் மொனராகலை மாவட்டத்தில் தேர்தல் சட்ட மீறல்கள் அதிகரித்த வண்ணமுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று நாட்களில் 300க்கும் அதிகமான சட்டவிரோத கட்சி அலுவலகங்கள் மாவட்டத்திலிருந்து தேர்தல்கள் செயலகத்தால் அகற்றப்பட்டுள்ளதாகவும் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மொனராகலை மாவட்டத்தில் 57 தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் கபே அமைப்பு குறிப்பட்டுள்ளது.

குறிப்பாக சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளமை, அச்சுறுத்தல் விடுக்கின்றமை மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளமை போன்ற சம்பவங்களே அதிகளவில் பதுவாகியுள்ளதாகவும் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, மொனராகலை மாவட்டத்தில் நிலவுகின்ற தேர்தல் சட்ட மீறல்களை கட்டுப்படுத்த .பொலிஸாருக்கு முடியாது உள்ளதாக பப்ரல் அமைப்பின நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பொலிஸ் நிலையங்களை அண்மித்த பகுதிகளில் இடம்பெறும் வன்முறை சம்பவங்களை கூட பொலிஸாருக்கு கட்டுப்படுத்த முடியாதுள்ளமையானது கவலைக்குரிய விடயம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ)

# இறந்ததாகக் கூறப்பட்ட பெண் இறுதிச் சடங்கில் கண் விழித்தார்!

(சென்னை)

தமிழகத்தின் வேலூர் அரசு மருத்துவமனையில் இறந்து விட்டதாகக் கூறப்பட்ட பெண் இறுதிச்சடங்கின் போது கண விழித்த சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வேலூர் மாவட்டம் வாணியம்பாடி பகுதியைச் சேர்ந்த ஷேனாஸ் (54) என்பவர் உடல்நிலை பாதிக்கப்பட்டு கடந்த 3 நாட்களுக்கு முன்பு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் வேலூர் அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் கடந்த 7 ஆம் திகதி இரவு இறந்ததாகக் கூறப்பட்டது.

அவரது இறப்பை மருத்துவர்கள் உறுதிப்படுத்தி உடலை குடும்பத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதையடுத்து, நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இறுதிச் சடங்குகள் இடம்பெற்றுள்ளன. உடல் மீது உறவினர்கள் தண்ணீர் ஊற்றிய போது, ஷேனாசின் கண்கள் லேசாக அசைந்துள்ளன, உதடுகள் மேலும் கீழுமாக அசைந்துள்ளன. இதனால் பயத்தில் உறவினர்கள் அலறினர்.

உடனே அவரது குடும்பத்தினர் வாணியம்பாடியில் உள்ள தனியார் மருததுவமனை மருத்துவரை அழைத்து உடலை பரிசோதனை செய்துள்ளனர்.

பரிசோதித்த மருத்துவர், ஷேனாஸ் கோமா நிலையில் உள்ளார். இன்னும் சிறிது நேரத்தில் இறந்து விடுவார் ஏன தெரிவித்துள்ளார்.

அதன்படி, சிறிது நேரத்தில் ஷேனாஸ் உயிர் பிரிந்து விட்டது. இதையடுத்து அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. இச் சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரபபை ஏற்படுத்தியுள்ளது. (இ)

# ஓபாமாவை மோடி விரைவில் சந்திப்பார் இருதரப்பு உறவு குறித்து பேச முடிவு

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைச் சந்தித்து இரண்டு நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 29 மற்றும் 30ஆம் திகதிகளில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் வெள்ளை மாளிகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதன்போது, இருதரப்புக்கும் இடையிலான வியூக ரீதியிலான கூட்டுறவை விரிவாக்குவது தொடர்பில் பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான வியூக ரீதியிலான ஒத்துழைப்பின் வாக்குறுதிகளை நிறைவேற்ற நரேந்திர மோடியுடன் இணைந்து செயற்பட பராக் ஒபாமா ஆர்வத்துடன் இருப்பதாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் உலகிற்கும் நீண்ட காலத்தில் பயனளிக்கும் நடவடிக்கைகள் போன்ற விவகாரங்கள் தொடர்பில் இவர்கள் இருவரும் ஆலோசனை நடத்துவார்கள் என இந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத்தின் முதலமைச்சராக நரேந்திர மோடி இருந்த போது நிகழ்ந்த மதக் கலவரங்களையடுத்து, 2005 ஆம் ஆண்டில் அவருக்கு அமெரிக்க நுழைவு அனுமதி மறுக்கப்பட்டது.

மத சுதந்திரத்தை மீறும் வெளிநாட்டு அதிகாரிகள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடைவிதிக்கும் சட்டத்தின் படி இந்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் நரேந்திர மோடி அமெரிக்காவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். (செ-11)

# யாழ், களனி, சப்ரகமுவ பல்கலைகளில் புதிய பாடநெறிகள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

2013, 2014 ஆம் ஆண்டு பல்கலைக்கழக கல்வியாண்டில் இரண்டு புதிய பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், களனி மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களில் மொழிபெயர்ப்பு ஆய்வுகள் தொடாபான பாடநெறியொன்றும், களனி பல்கலைக்கழகத்தில் மென்பொருள் பொறியியல் துறை தொடர்பான பாடநெறியொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய 2 இலட்சத்து 46 ஆயிரத்து 665 மாணவர்களில் ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 740 பேர் பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதிபெற்றுள்ளனர்.

இதில் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பித்த 55 ஆயிரத்து 178 பேர் பல்கலைக்கழக கல்வியாண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகியிருந்த நிலையில் அடுத்த வருட முற்பகுதியில் புதிய கல்வியாண்டுகள் பல்கலைக்கழகங்களில் ஆரம்பமாகவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## இதயம் ஒரு கோயில்



✦ கடவுளை அடைவதற்குப் பாதைகள் பல உள்ளன. அதில், எந்த வழியில் வேண்டுமானாலும் நீ செல்லலாம்.

✦ பக்தனின் இதயமே கடவுள் குடியிருக்கும் இல்லம. நல்ல எண்ணங்களே அவருக்குஉரிய அர்ச்சனை.

✦ வெறும் சாஸ்திரம் கற்பதை விட, உண்மையின் பாதையில் நடப்பதே உயர்வானது.

✦ செல்வத்தால் உண்டாகும் பெருமை நிலைத்து நிற்பதில்லை.

✦ பெண்களைத் தாயாகக் கருதி நடத்துங்கள். அதனால், மனதில் தீமைகள் அனைத்தும் மறைந்து போகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட மாகாண தடகள விளையாட்டு; மருதனார்மடம் வாழ்வகம் சம்பியன்







மருதனார்மடம் வாழ்வகம் நிறுவனத்தின் நிறுவுநர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி ஞாபகார்த்தமாக விழிப்புலனற் றோர்களுக்கிடையில் வடமாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட தடகள விளையாட்டு போட்டிகளில் 303 புள்ளிகள் பெற்று மருதனார்மடம் வாழ்வகம் நிறுவனம் சம்பியனாகியது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் வாழ் வகத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்போட்டி நடைபெற்றது.

விழிப்புலனற்றோருக்காக முதன் முறையாக இந்த தடகள போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

இந்த தடகள போட்டிகளில், யாழ்ப்பாணம் மருதனார்மடம் வாழ்வகம் நிறுவனம், யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கம், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லம், வவுனியா கொந்தக்காரன் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, வவுனியா ஓகன் நிறுவனம், வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் ஆகியவற்றின் வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

இந்த தடகள போட்டிகளில், 303 புள்ளிகள் பெற்ற வாழ்வக நிறுவனம் முதலிடத்தையும், 134 புள்ளிகள் பெற்ற புதுக்குடியிருப்பு இனிய பாரதி இல்லம் இரண்டாமிடத்தையும், 48 புள்ளிகள் பெற்ற யாழ் விழிப்புலனற்றோர் சங்கம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. (க)

# இடைநீக்கம் செய்யப்பட்டார் பாகிஸ்தானின் சயிட் அஜ்மல்



பிரபல பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மல் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து நீக்கம் செய்யப்பட்டார்.

சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் தரப்படுத்தில் உலகின் முதல்நிலை வீரராக இருப்பவர் சயிட் அஜ்மல்.

பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளரான இவரது பந்துவீச்சு நடவடிக்கை விதிமீறியது என்று கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த மாதம் பிரிஸ்பேனில் நடத்தப்பட்ட சோதனைகளை தொடர்ந்து உடனடியாக இவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து உய்ர்மட்ட சர்வதேச கிரிக்கெட் வாரியம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (க)

## அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்

யாழ்.மாவட்ட செயலகத்தால் வருடாந்தம் நடத்தப்படும் அரச அதிபர் வெற்றிக்கிண்ணப் போட்டியில் எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டமும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டமும் கரவெட்டி இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

வருடா வருடம் நடத்தப்படும் இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட செயல்க அணிகள் மற்றும் 15 பிரதேச செயலக அணிகள் என்பன பங்குபற்றவுள்ளன. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டி







இலங்கைப் பாடசாலை 19 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையே நடைபெற்ற ஆண்களுக்கான உடற்பயிற்சி போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி இரண்டாமிடத்தையும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

கொழும்பு வியாங்கொட சியான ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மைதானத்தில் கடந்த சனிக்கிழமை உடற்பயிற்சி போட்டிகள் இடம் பெற்றன. இதில் வடமாகாண பாடசாலைகள் ரீதியில், முதலாம் இடம்பெற்ற ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அணியும், இரண்டாம் இடம்பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் பங்குபற்றின.

இதில், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி இரண்டாமிடத்தையும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. மேற்படி பாடசாலைகள், கடந்த 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டிகளில் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# தேசிய மட்ட கபடிப்போட்டி

## பண்டத்தரிப்பு யசிந்தா ஆர்.சி.வித்தி சம்பியன்



புளோறன்ஸ்சின் அபார ஆட்டம் மூலம் வவுனியா பரக்கும்பா மகாவித்தியாலய அணியை வீழ்த்தி பண்டத்தரிப்பு யசிந்தா ஆர்.சி.வித்தியாலய அணி தேசிய மட்ட கபடிச் சம்பியன் ஆனது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு யசிந்தா ஆர்.சி.வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா பரக்கும்பா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் பண்டத்தரிப்பு யசிந்தா ஆர்.சி வித்தியாலய அணி 16:13 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று தேசிய மட்ட சம்பியனானது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து நொச்சிகம லிதர்ஷ மகா வித்தியாலய அணி மோதிக்கொண்டது. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை அணி 40:26 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக்கொண்டது.

இதேவேளை 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கழுத்தேகம மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து பருத்தித்துறை கலட்டி ஆர்.சி. வித்தியாலய அணி மோதிக்கொண்டது. இதில் கழுத்தேகம மத்திய மகா வித்தியாலய அணி 45:44 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (க)

# தோல்விக்கு நானே பொறுப்பு

இங்கிலாந்து அணிக்கு எதிரான இருபது - 20 போட்டியில் தோல்வி அடைந்ததற்கு தானே பொறுப்பேற்பதாக இந்திய அணியின் அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதிய இருபது - 20 போட்டியில், 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா தோல்வி அடைந்தது.

இப்போட்டியின் கடைசி ஓவரில் வெற்றிக்கு 17 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஆனால் 13 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வி அடைந்தது.

இதில், 3, 5 ஆவது பந்தில் ஒரு ஓட்டம் எடுக்கும் வாய்ப்பு இருந்தும் டோனி எடுக்கவில்லை, கடைசி பந்தில் சிக்சர் அடித்து அணியை வெற்றிக்கு அழைத்துச் செல்ல தவறினார், இதனால் கடும் விமர்சனங்கள் எழுந்தன.

இதுகுறித்து டோனி கூறுகையில்,

துடுப்பாட்ட வரிசையில் 6 அல்லது 7 ஆவது இடத்தில் வரும் வீரர், வந்த வேகத்தில் பந்துகளை வேகமாக அடித்துவிட முடியாது.

அம்பதி ராயுடுவைப் பொறுத்த வரையில், அப்போது தான் களமிறங்கி இருந்தார். தவிர 19 ஆவது ஓவரில் இவர், பந்துகளை சரியாக எதிர்கொள்ளத் தவறினார்.

பொதுவாக 6 பந்தில் 17 ஓட்டங்கள் எடுப்பது என்பது, எப்போதுமே கடினமானது தான். இதனால் கடைசி ஓவரில் அனைத்து பந்துகளையும் நானே எதிர்கொள்வது என நினைத்து துடுப்பாட செய்ய முடிவு செய்தேன்.

இவற்றை சரியான முறையில் எதிர்கொண்டிருக்க வேண்டும். ஆனால், பேட்டின் நுனியில் சந்தித்ததால், பவுண்டரிகள் அடிக்க முடியவில்லை.



கடைசியில் போட்டியை வெற்றிகரமாக முடிக்கவில்லை. இதனால் தோல்விக்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

முதல் பந்தில் சிக்சர் அடித்தேன், அடுத்த இரு பந்துகளையும் அடித்து இருக்க வேண்டும். இதை நழுவ விட்டதால் நெருக்கடி அதிகரித்தது என்று தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நாவில் உரை...

இராணுவத்தை ஏவி லட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை ஈவு இரக்கமின்றி படுகொலை செய்த பேரினவாத அரசின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனப்படு கொலைக் குற்றத்துக்காக தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளி ஆவார்.

2009 போரின் இறுதிக் கட்டத்தில் எண்ணிலடங்காத தமிழர்கள் படுகொலை உள்ளிட்ட இலங்கை அரசின் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் குறித்து, சுதந்திரமான பன்னாட்டு நீதிவிசாரணை நடத்த வேண்டும் என்று, இந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைக் ஆணையகத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, ஐ.நாவின் மனித உரிமை ஆணையர் மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழுவை அறிவித்தபோதிலும், அந்த விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க மாட்டோம் என்று ஆணவத்தோடு அறிவித்து, ஐ.நா.மன்றத்தின் மதிப்புக்கே பங்கம் விளைவித்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை ஐ.நா.மன்றத்தின் பொதுச் சபையில் செப்ரெம்பர் 25-ம் திகதி உரையாற்ற அழைப்பு விடுத்திருப்பது ஐ.நாவின் நம்பகத்தன்மையையே கேள்விக்குறியாக்கிவிட்டது என்பதால் அதற்குக் கண்டனம் தெரிவிக்கும் அதேவேளை, ராஜ பக்ஷவுக்கு விடுத்த அழைப்பை ஐ.நா. சபை திரும்பப் பெறவேண்டும்.

ஐ.நா. அறிவித்த விசாரணைக் குழுவினரை இந்தியாவுக்கு வர அனுமதித்தது, தொப்புள் கொடி உறவுகளான ஏழரைக்கோடி தமிழர்கள் வாழும் தமிழ்நாட்டில் இலங்கை அரசின் இனப்படுகொலையால் தமிழகத்திற்கு தஞ்சமென வந்த ஈழத் தமிழ் அகதிகள் விசாரணைக் குழுவிடம் அச்சமின்றி வாக்குமூலம் வழங்க உத்தரவாதம் தருகிற நடவடிக்கையை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

அதனைச் செயல்படுத்த தமிழக அரசு வலியுறுத்த வேண்டும். இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆக்கிரமித்துள்ள இலங்கை இராணுவமும், பொலிஸாரும் முற்றாக வெளியேற்றப்பட்டு, ஈழத் தமிழர் தாயகத்தில் திணிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களை அகற்றி, சிறை முகாம்களில் உள்ள ஈழத் தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டு, சுதந்திரத் தமிழ் ஈழத்துக்கான பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த தீர்மானங்களை வலியுறுத்தி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், வைகோ தலைமையில் அறப்போர் ஆர்ப்பாட்டம் நேற்று நடத்தப்பட்டது. (செ-11)

## இலங்.அகதி...

கள் தவறாக போயுள்ளதாக, அகதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நான், எனது மனைவியையும், 13 வயது மகளையும் 7 வயது மகனையும் மே மாதம் 7 ஆம் திகதியன்றுதான் கடைசியாகப் பார்த்தேன். நான் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் எனது குடும்பம் எங்கே உள்ளதென எனக்கு தெரியாதுள்ளது.

எனது பிள்ளைகள் பாடசாலைக்கு போகின்றனரா அல்லது ஒரு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்றும் எனக்கு தெரியாது என அவர் இந்திய ஊடகமொன்றுக்கு கூறினார்.

ஐ.நாவின் கவனத்தை ஈர்ப்பதற்காக இவரும் வேறு 24 அகதிகளும் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

இந்த முகாமில் உள்ள இன்னும் இரண்டு இலங்கை தமிழர்கள், தமது குடும்பங்கள் எங்கே உள்ளதென ஏதும் தெரியாத நிலையில் உள்ளனர்.

தாசில்தாருக்கு பல மனுக்கள் கொடுத்த போதிலும் ஒரு சொல் கூட பதிலாக வரவில்லை என வேறு ஒரு இலங்கைத் தமிழர் கூறினார்.

தாம் வெளிநாட்டவர் சட்டத்தின கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் ஆனால் இந்த சட்டத்தில் குடும்பத்தினரை பிரிந்து தடுத்து வைக்கப்பட வேண்டுமென கூறப்படவில்லை என அங்கிருந்தோர் கூறினர்.

இந்த முகாமில் தாங்கள் 3 மாதங்களுக்கு அதிகமாக இருப்பதாகவும் ஆனால் பொலிஸார் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். (செ-11)

## த.தே.கூட்டமைப்பு...

மன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணித்தலைவர் சேயோன் மற்றும் உயிர் நீத்தவர்களின் உறவுகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். அந்த வேளை அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் இந்த இடத்தில் எவருக்கும் அஞ்சலி செலுத்த முடியாது. இதற்கான உத்தரவை நீதிமன்றம் வழங்கியுள்ளது. எனவே அவ் விடத்தை விட்டு உடனடியாக அகலுமாறு கூறினர்.

இதனையடுத்து அங்கு கூடியிருந்த த.தே.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதையடுத்து நீதிமன்ற கட்டளையை பொலிஸ் பொறுப்பதிகாரி காண்பித்ததற்கு இணங்க கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த இடத்திலிருந்து அகன்று சென்று அருகில் உள்ள சத்துருக்கொண்டான் காளிகோயிலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்மசாந்தி வேண்டி 24 சுடர்களை ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கருத்துக்கூறுகையில், மட்டக்களப்பு மாவட்டத்திலே பல படுகொலைகள் நடந்தேறி இருக்கின்றன.

இந்தப் படுகொலைகளில் தமிழ் மக்கள் வகைதொகையின்றி சிங்கள இராணுவத்தினரால் துடிக்கத் துடிக்க படுகொலை செய்யப்பட்டு கிடங்குகளில் உயிருடன் போட்டு எரித்த வரலாறுகளே அதிகம். அவர்களின் நினைவாக ஒரு சுடரினை ஏற்றி உயிர்நீத்த தமிழ்மக்களுக்கு அஞ்சலி செலுத்தக்கூட முடியாத நிலையிலே இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள் துன்பதுயரங்களை அனுபவித்து வருகின்றார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரையில் தமிழர் பிரதேசங்களில் நன்கு திட்டமிட்ட முறையில் தமிழ் இனப்படுகொலைகள் நடந்தேறி இருக்கின்றன.

அந்த படுகொலைகளில் உயிர் நீத்த உறவுகள் இந்த நாட்டு பிரஜைகள் என்பதனை இந்த நாட்டு அரசாங்கம் மறந்து செயற்படுவது ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் வெட்கக்கேடான விடயமாகவே பார்க்க வேண்டி இருக்கின்றது. கடந்த போராட்ட வரலாற்றில் நூற்றுக்கணக்கில் கொலைசெய்யப்பட்ட இஸ்லாமிய மக்களும், ஆயிரக் கணக்கில் படுகொலை செய்யப்பட்ட சிங்கள மக்களும் சுதந்திரமாக அவர்களை நினைவுகூர முடிகின்றது. அவர்களுக்கு எந்தத் தடையும் இல்லை.

ஆனால் லட்சக்கணக்கான உறவுகளை இழந்த தமிழ்மக்கள் மாத்திரம் தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த முடியாத நிலையில் இலங்கையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனை அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளவேண்டும் என்றார். (செ-11)

## முஸ்லிம்...

எனினும், முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதனை ஜனாதிபதி அனுமதிக்கவில்லை.

முஸ்லிம் மக்களின் நலன்களைக் கருத்திற் கொண்டே ஊவா மாகாண சபைத் தேர்தலில் கூட்டணியாக செயற்படுகின்றோம்.

முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டுமென முஸ்லிம் மக்கள் கோருகின்றனர்.

மக்களுக்காக குரல் கொடுக்கும் கட்சி என்ற ரீதியில், அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது.

ஊவா மாகாண சபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிட்டாலும், அரசாங்கத்தை விட்டு விலகப் போவதில்லை.

ஜனாதிபதி இனவாதமின்றி நாட்டைப் பற்றி சிந்திக்கக் கூடிய ஒருவர். முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதனை ஜனாதிபதி வேடிக்கை பார்க்கமாட்டார்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்து, சுதந்திர நாடொன்றை உருவாக்கிய பெருமை ஜனாதிபதியைச் சாரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் பதுளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்றபோது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். (செ-11)

## 14 உணவகங்களுக்கு...

காரி பணிமனையினர் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்.

சுகாதார வைத்தியதிகாரி பணிமனையின், மேற்பார்வையின் கீழ், சுகாதார பரிசோதகர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து கடந்த வாரம் நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையிலேயே இந்த உணவகங்களும், வெதுப்பகங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த உணவகங்களில், உடல் நலத்துக்கு ஒவ்வாத முறையில் உணவு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதிக நாட்களுக்கு உணவு பொருட்களை குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மேலங்கி அணியாமல் வெதுப்பக உணவுகள் தயாரித்தமை மற்றும் பணியாற்றுபவர்களுக்கு மருத்துவ சான்றிதழ்கள் இல்லாமை போன்ற குற்றங்களுக்காக 2 வெதுப்பகங்களும் பிடிக்கப்பட்டன.

உணவகங்கள், வெதுப்பகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்குகள் எதிர்வரும் 17 மற்றும் 28 ஆகிய தினங்களில் முறையே மல்லாகம் நீதவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் ஆகியவற்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக பணிமனையினர் மேலும் கூறினர். (செ-11)

## பெண்களின்...

ந்து நிலையத்தில் நின்று, அங்கு நின்றிருந்த பெண்களின் அங்கங்களை தனது தொலை பேசியில் புகைப்படங்கள் எடுத்துள்ளார்.

இதனை அவதானித்த பொது மக்கள், சந்தேகநபரை பிடித்து பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள உபபொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

தொடர்ந்து, சந்தேகநபர், யாழ்ப்பாண பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு விசாரணை செய்தபோது, சந்தேகநபரது தொலைபேசியில் பெண்களின் அங்கங்களின் புகைபடங்கள் பல இருந்தமை தெரியவந்தது. இதனையடுத்து, சந்தேகநபர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

மேற்படி சந்தேகநபர் கடந்த ஜூலை மாதம் வாகனமொன்றை மதுபோதையில் செலுத்தி சென்று, அராலி சந்தியில் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## சர்வதேசம் எம்மை திரும்பி...

மாவை சேனாதிராசா, அன்றைய தமிழ் இளைஞர் பேரவை நட்சத்திரம். நான் மாணவனாக தமிழ்த் தேசியத்தை திரும்பி பார்த்த போது, அங்கு இந்த நட்சத்திரம் ஒளிர்விட்டுக் கொண்டிருந்தது. இன்று அந்த நட்சத்திரம் பிரகாசித்து உச்சி வானிலே ஏறி நின்று உரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவருக்கும் விழா காணும் கட்சிக்கும் தலைநகர தமிழர்களின் வாழ்த்துக்களை இங்கே என்னுடன் வந்திருக்கும் எங்கள் ஊடக செயலாளர் பாஸ்கராவையும் இணைத்துக் கொண்டு தெரிவித்துக் கொள்கின்றேன்.

வவுனியாவில் இருந்து விடைபெற்று, பரப்புரை பணிகளுக்காக உடனடியாக ஊவா மாகாணத்தை நோக்கி பயணிக்க வேண்டிய நீண்ட இரவுநேர பயணம் என்னை அழைகின்றது. ஆதலால் இங்கு நான் நீண்ட உரையாற்ற முற்படவில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக பதவியேற்றுள்ள அண்ணன் மாவை சேனாதிராஜாவுக்கு வாழ்த்துக்களுடன் இரண்டு யோசனைகளையும் முன்வைக்க விரும்புகின்றேன்.

முதலாவதாக, வடக்குக் கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம் மக்கள், புலம்பெயர் தமிழர்கள், தமிழ்நாட்டு ஆதரவு சக்திகள், சிங்கள முற்போக்கு சக்திகள் ஆகிய ஆறு தரப்பினரையும் ஒரு நேர்கோட்டில் கொண்டு வாருங்கள். இந்தத் தரப்புகளை அரவணைத்து கூட்டிணைக்கும் தோழமை பொறிமுறை ஒன்றை தோற்றுவியுங்கள்.

இந்த பொறிமுறை உள்நாட்டிலே கட்டாயமாக தேர்தல் கூட்டமைப்பாக அமைந்திட வேண்டும் என்பது இல்லை. அப்படி இருக்கக் கூடாது என்பதும் இல்லை. தேர்தல்களின் போது அவசியப்படுமானால் நாம் கூடாக முடிவுகள் எடுக்கலாம். ஆனால், இங்கே நான் தேர்தல் இலக்குகளுக்கு அப்பாற்பட்ட கூட்டிணைவு ஒன்றையே பரிந்துரைக்கிறேன்.

இங்கே உரையாற்றிய வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் சொன்னது போல் பல்வேறு சிறு நிறுவனங்களை கூட்டிணைத்து பெரிய ஒரு நிறுவனத்தை உருவாக்குவது என்பது போன்றதாகும் இந்த யோசனை. இந்த இணைவு சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. இனவாதத்திற்கு எதிரானது. சிங்கள மக்களுக்கு உண்மையை எடுத்து கூறும் இணைவாகும்.

இரண்டாவதாக, இங்கே விடுதலை புலிகளின் போராட்டம் தொடராக பல்வேறு கருத்துகள் கூறப்பட்டன. விடுதலைப் புலிகளின் சரிகளையும், பிழைகளையும் பற்றிப் பேசப்பட்டன. ஒரு விடயத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். இன்று உலகம், சர்வதேச சமூகம், ஐ.நா சபை எம்மைத் திரும்பி பார்க்கின்ற தென்றால் அதற்கு அடித்தளமிட்டது விடுதலைப் புலிகளின் போராட்டமே. போராடாமல் உலகம் எம்மை திரும்பி பார்க்காது.

அரசின் மீது அழுத்தம் செலுத்துங்கள் என்று நாம் அமெரிக்காவையும், இந்தியாவையும், ஐ.நாவையும் கோருகின்றோம். நாம் இங்கே தொடர்ச்சியாக போராடினால், அந்த போராட்டமே, அமெரிக்காவையும், இந்தியாவையும் ஐ.நாவையும் செயற்படுத்தும் அழுத்தமாக மாறும்.

போராட்டம் என்றால் ஆயுதப் போராட்டத்தை நான் இங்கே கூறவரவில்லை. ஜனநாயக அறவழிப் போராட்டங்களை ஆரம்பியுங்கள் என்றே கூறுகின்றேன். 1960களில் தந்தை செல்வா தலைமையில் தமிழரசுக் கட்சி முன்னெடுத்த அறவழிப் போராட்டங்களை திட்டமிட்டு மீண்டும் ஆரம்பியுங்கள். உலகம் எம்மை திரும்பி பார்க்கும். அரசுக்கு புரியும் பாஷையும் அதுதான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே காத்திரமான இந்த இரண்டு பணிகளையும் உங்கள் தலைமையின் கீழ் இலங்கை தமிழரசுக் கட்சி முன்னெடுக்க வேண்டும். அதற்கு நாம் தோழமை கட்சி என்ற அடிப்படையில் துணையிருப்போம். இதைவிட இங்கே சொல்ல எதுவும் என்னிடம் இல்லை என மனோ கணேசன் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## சம்பந்தனின்...

பங்காளி கட்சி என்ற ரீதியில் உதவிகளை வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

உதவிகளை வழங்குமாறு தென்னாபிரிக்காவிற்கு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். நிபந்தனைகள் இன்றி கலந்துரையாடல்களை நடத்துவது என்றால், அது சிறந்ததாக அமையும். அது குறித்து எந்தவித பிரச்சினையும் கிடையாது. நாட்டின் அரசாங்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அல்ல என்பதனை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே நாட்டின் அரசாங்கம். சிறுபான்மை என்ற விதத்தில், பெரும்பான்மையினருக்கு, அவர்களினால் நிபந்தனைகளை விடுக்க முடியாது. நிபந்தனைகள் இன்றி கலந்துரையாடல்களை அவர்கள் நடத்த முன்வர வேண்டும்.

காலவரையறை குறித்து அவர்களுக்கு நிபந்தனைகளை விடுக்க முடியாது. கலந்துரையாடல்களின் போது எழுகின்ற பிரச்சினைகள் என்னவென்பது குறித்து அவர்கள் பார்க்க வேண்டும். அவை குறித்து கலந்துரையாடல்களை நடத்த வேண்டும். சர்வதேச தலையீடுகள் குறித்த முடிவுகளை நாட்டின் அரசாங்கமே எடுக்க வேண்டும்.

எமது நாட்டின் அரசாங்கம் அதற்கு இணங்கவில்லை என்றால், அதனை செய்ய முடியாது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்திற்கு நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு அரசாங்கம் இடமளிக்கவில்லை. அவர்கள் வர மாட்டார்கள். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூறுகின்றது என்பதற்காக அவர்களினால் வர முடியுமா என அமைச்சர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## ஐ.நாவில்...


ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்மாதம் 24 முதல் 26 வரை நடைபெறவுள்ள பொது விவாதத்தில் உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கூட்டத்தொடரில் கலந்து கொள்ள 21 ஆம் திகதி நியூயோர்க் நோக்கி ஜனாதிபதி மகிந்த பயணிப்பார் என ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சார்யாபிஷேக சுபமுகூர்த்தப் பத்திரிகை

## (குரு பட்டாபிஷேகம்)



ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களகரமான ஜய வருடம் ஆவணித்திங்கள் 26ஆம் நாள் (2014.09.11) வியாழக்கிழமை ரேவதி நட்சத்திரமும் திருதியைத் திதியும் சித்தாமிர்த யோகமும் கூடிய காலை 7.35 மணி தொடக்கம் 9.03 மணி வரையுள்ள கன்னி இலக்கினமும் சூரிய ஓரையும் இராஜத குணவேளையும் கூடிய சுப முகூர்த்த வேளையில்

சிவஸ்ரீ கந்தையா குருக்களின் பூட்டனும் தியாகராஜாக்குருக்களின் பேரனும்
சோமாஸ்கந்தராஜாக்குருக்களின் ஏக புத்திரனுமாகிய

## சிரஞ்சீவி தனஞ்சயன் குரு அவர்களுக்கு

எமது பரம்பரைத் தெய்வ சன்னிதானமான கரவெட்டி கிழக்கு தல்லையம்புலம் அருள்மிகு ஸ்ரீ வீரபத்திர பத்திரகாளி தேவஸ்தான மண்டபத்தில், நெல்லண்டை பத்திரகாளியம்மன் வீரமாகாளியம்மன், வட பத்திரகாளியம்மன், திருமறைக் காட்டு சுவேதவனப்பெருமான் திருவருளுடனும் விசேட தீட்சை, நிர்வாண தீட்சை ஆச்சார்ய அபிஷேகம் (குருபட்டாபிஷேகம்) செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து சிறப்பித்து, குருமார்கள் இளங்குருவை ஆசீர்வதித்தும், ஏனையோர்கள் குருவின் ஆசியைப் பெற்றேகுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### ஆச்சார்யாபிஷேக பிரதமகுரு (தீட்சாகுரு)

"சிவாகம சித்தாந்த ஞானதேசிகபானு", " பிரதிஷ்டா அலங்காரசித்தாந்த ஸாகரம்"
"பிரதிஷ்டாசிரோன்மணி", இந்துமத குருபீடாதிபதி
**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P அவர்கள்**
பிரதமகுரு வல்லைவ ஸ்ரீ முத்துமாரி தேவஸ்தானம்
(ஆச்சாரிய பீடாதிபதி அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்)

### வித்தியாகுருமார்கள்

"செஞ்சொற் சாதகன்"
சிவஸ்ரீ மு.சசிதரக்குருக்கள் B.Sc
(இயக்குநர், சைவக்குருமணிகள் குருகுலம்)

### சர்வசாதக ஆசிரியர்

"சாதக உபதேசவித்தியாபதி"
சிவஸ்ரீ.அருணாசல ஐயப்பதாஸக் குருக்கள்
(கட்டுவன் ஐயப்பன் தேவஸ்தானம்)
சிவஸ்ரீ.பா.நரேந்தராக்குருக்கள் (நந்து)
(உடுப்பிட்டி, கொம்மான்துறை அம்மன் தேவஸ்தானம்)

### வாழ்த்துரை


"மாந்திரீகபூசணம்"
சிவஸ்ரீ.வேலாயுத இராமலிங்கம் குருக்கள்
(பத்து முருகன் திருவருட் ஜோதி)
"சாதக ஞானபானு"
சிவஸ்ரீ.நட.கேதீஸ்வராக்குருக்கள்
(அனுராதபுரம் கதிரேசன் தேவஸ்தானம்)
"துவஜாரோகண விபூதர்"
சிவஸ்ரீ.பா.பாலமனோண் குருக்கள்
(ஏழாலை பிள்ளையார் தேவஸ்தானம்)
"சாதக இளவரசு"
சிவஸ்ரீ.சுந்தரராஜா ஸ்ரீரங்கநாதக்குருக்கள்
(வடக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானம்)
"ஸ்ரீசக்தி கிரியா குருமணி"
சிவஸ்ரீ.இ.குமாரசாமிக்குருக்கள்
(சுட்டிபுரம் அம்மன் தேவஸ்தானம்)

### நிகழ்வு ஒருங்கிணைப்பும் ஆசியுரையும்

"சேவாதுாதர் சிவபூசை துரந்தரர்"
சிவஸ்ரீ.கந்த.சோமசுந்தரக்குருக்கள் (J.P)
(ஓய்வு நிலை அதிபர்)

### நெறியாள்கை

"சக்தி உபாசகர்" "கிரியா சிரோன்மணி" "அருள்ஞான கிரியாமணி"
"கும்பாபிஷேக துரந்தரர்"
சிவஸ்ரீ.இ.பாலகிருஷ்ணக் குருக்கள்
(பிரதமகுரு கொம்மான்துறை,
மனோன்மணி தேவஸ்தானம்)



### அருள் உரையும் ஆசியுரையும்

"ஆகமக் கிரியா ஜோதி" "பதிபசுபாசகர்"
சிவஸ்ரீ சாதாசிவ மகாலிங்க சிவக்குருக்கள்
(அதிபர், சைவக்குருமணிகள் குருகுலம், பிரதமகுரு) J.P
(நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயம்)

### வரவேற்பாளர்கள்

சிவஸ்ரீ.இராமலிங்க சுந்தரலிங்கக்குருக்கள்
திருமதி பிரபாலினி சுந்தரலிங்கக் குருக்கள்
(நெல்லண்டை பத்திரகாளி தேவஸ்தானம்)
சிவஸ்ரீ.திருஞான.திருஞானசம்பந்தக் குருக்கள்
திருமதி ஜீவிதா திருஞானசம்பந்தக்குரு
(முல்லைத்தீவு குமுழமுனை பிள்ளையார்)
சிவஸ்ரீ.வை.சிவராஜாக்குருக்கள் (இலண்டன்)
சிவத்திருமதி வரலட்சுமி சிவராசக்குருக்கள்

சிவஸ்ரீ.தியாக.அமிர்த கடீசக்குருக்கள் (அமரர்)
திருமதி கனகாம்பிகை அமிர்தகடீசக்குரு

சிவத்திருமதி விஜயலட்சுமியம்மா ரகு குடும்பத்தினர்
(இலண்டன்)

## தங்கள் நல்வரவை நாடும்

சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
திருமதி புவனேஸ்வரியம்மா சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்
**நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆதீனஹர்த்தா**
ஸ்ரீவீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன் தேவஸ்தானாதிபதி
சிவஸ்ரீ.தியாக.வியோமகேசக் குருக்கள் (குடும்பத்தினர்)
**(ஜேர்மனி)**

## அழைப்பாளர்களும், வரவேற்பாளர்களும்

கரவெட்டிக்கிழக்கு கரவெட்டி தல்லையம்புலம் அருள்மிகு
ஸ்ரீ வீரபத்திரகாளி தேவஸ்தான
பரிபாலன சபையினர்கள், ஊரவர்கள்.

(7706)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.